மருத்துவர் மன்றம்

திங்கள் வெளியீடு

மலர் 1 | பிலவஞ ஆவணி-செப்டம்பர் 1961 | இதழ் 2

பின்தங்கிய வகுப்பினரில் மருத்துவர் நிலை

அண்மையில் மத்திய சர்க்காரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இனி பிற்பட்ட வகுப்பினர் என்ற சாதி அடிப்படையில் பட்டியல் தயாரிப்பதில்லை யென்றும் பணவசதி அடிப்படையில் ஒருவர் பிற்பட்ட நிலையைக் கணிக்கவேண்டுமெனவும் ராஜ்ய சர்க்கார்களுக்கு அதிகாரத்துறைப் பத்திரிகைச் செய்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போதுள்ள அரிசனங்கள் மலைச்சாதியினரான ஷெட்யூல் வகுப்புப் பட்டியல்கள் தொடர்ந்து இருக்கும் என்பதோடு இராஜ்ய சர்க்கார்கள் தங்கள் உசிதம்போல் பிற்பட்ட வகுப்பினர் நிலவரத்தைக் கணிக்க உரிமைக் கொள்கையைக் கைக்கொள்ளலாம் எனவும் கூறுகிறது.

27—8—61 நவ இந்தியா பத்திரிகையில் வெளியாகியுள்ள இச்செய்தி மேலும் கூறுவதாவது: சாதியற்ற சமுதாயம் அமைக்கவேண்டும் என்ற சர்க்கார் லட்சியத்திற்கு ஜனங்களைப் பல்வேறு உறுப்பினர்களாகப் பிரித்துக் கணக்கெடுப்பது, சமூக ஒருமைப்பாடு ஐக்கிய மனப்பான்மை சமத்துவ உணர்ச்சி இவைகளுக்குப் பேராபத்தை விளைவிக்குமாதலால் இந்த உத்தரவு இப்போதைய அவசரத்தேவை என்ற கருத்தை யூனியன் உள்துறை அமைச்சு அறிக்கை கூறுகிறது. சாதியற்ற சமுதாயத்தையும் நமது முதல் அமைச்சர் **காமராஜர்** கூறுகிற ஏழை, பணக்காரன் என்ற இரண்டு சாதியை ஒரே சாதியாக நிர்ணயிப்பதையும் தேசம் தாராளமாக வரவேற்கும் என்பதற்கு ஐயமில்லை. இடையில் அரிசனங்கள் மலைச் சாதியினர் வளரவேண்டும் என்று இருப்பது எந்தக் காரணத்திற்காக, அவர்கள் ஷெட்யூல் வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்களோ, அவை இன்றும் மாறவில்லை; வளர்கிறது என்றுதானே பொருள்? மனிதனின் பொருளாதாரத் துறையில் உயர்வு தாழ்வு இந்திய மக்கள்

யாவருக்கும் பொதுவான பிரச்சினை யென்றால் தற்போதுள்ள ஷெட்யூல் வகுப்பினருக்கும் பொருந்த வேண்டுமல்லவா? மீண்டும் அவர்கள் சலுகையை நீடிப்பதின் காரணம் மீண்டும் சாதிப் பூசல் சமுதாயத்தில் சமுத்துவம், சகோதரத்வம் இவைகளில் சரிசமம் வகிக்க முடியாத நிலை இன்னும் இருக்கிறது என்றுதானே அர்த்தம்?

அந்த அடிப்படையில் சர்க்கார் நினைத்தால் பிற்பட்ட வகுப்பினரில் மிகமிகத் தாழ்மையாக மலைச்சாதியினர், அரிசனங்கள் இவர்களுக்கும் கீழ்ப்பட்ட பலசமூகம் உள்ளன என்பதை மறக்கக்கூடாது. அதில் மக்கள் சமூகத்திற்குத் தொண்டு செய்வதைத் தனது லட்சியமாகக் கொண்ட மருத்துவ சமூகம் எல்லாச் சமூகத்திற்கும் ஊழியம் செய்யும் மிகமிகப் பிற்பட்ட சமூகம் என்பதைப் பல தடவை பல ஆண்டுகளாகச் சர்க்காருக்கு அவர்கள் குறைபாடுகளைத் தெரிவித்து வருகிறார்கள்.மத்திய சர்க்காரோ மாகாண சர்க்காரோ கவனித்ததாகத் தெரியவில்லை. பொதுவாகத் தென்னிந்தியாவிற்கு வடக்கேயுள்ள இராஜ்யங்களில் மருத்துவர்கள் என்று சொல்லப்படும் சித்த வைத்தியர்கள் முடிதிருத்தும் தொழிலாளர்கள், இசை வாத்தியக்காரர்கள். தென்னிந்தியாவைத் தவிர மற்ற மாகாணங்களில் மக்கள் வாழ்க்கையில் சரிசமத்துவம் அளிக்கப்பட்டு மக்களோடு மக்களாக வாழ்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் அப்படியல்ல என்பது தமிழ் நாட்டார் அறியாதது அல்ல. சுதந்திர இந்தியாவிற்குப் பின் இச்சமூகம் எல்லாச் சமூகங்களுக்கும் பிற்பட்ட சமூகமாகத் திகழ்கிறது.

எந்தவகையிலும் இச்சமூகத்தில் இன்றுவரை முன்னேற்றமே கிடையாது. அரிசனங்கள், மலைச்சாதியினராவது ஒவ்வொரு பகுதியிலே கும்பல் கும்பலாக வசிக்கிறார்கள். இவர்கள் கிராமங்களில் கிராமத்திற்கு ஒருவர் இருவராகவும் நகரங்களில் தெருவிற்கு ஒருவராகவும் சிதறி வாழ்வார்கள். இவர்கள் செய்யும் தொழில்கள் மக்கள் தொண்டு. பொருளாதாரத்தில் மிகவும் பிற்போக்கானவர்கள். முடிதிருத்தும் தொழில், மக்களுக்கு அத்தியாவசியமான போதுதான். மாதம் ஒருமுறை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறைதான் தொழிலாளர்களைத் தேடுவார்கள். சித்த வைத்தியமோ, ஆலோபதியும் ஓமியோபதியும் உயர்ந்தெழுந்தபோது அதிலும் வீழ்ச்சிதான். இசைத்தொழிலோ ஆண்டுக்கு ஒருநாள். இதனால் இவர்கள் வாழ்க்கை உயர்வடையாது. உயிரை ஓரளவு காப்பாற்றிக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையில் எல்லாச்

458

சமூகத்திற்கும் தொழில் துறையில் கீழ்ப்படிந்து வாழ்ந்தாலன்றி கொஞ்சநஞ்ச வருவாயும் போய்விடும். இத்தகைய நிலையிலே வாடி வதங்கிக் காய்ந்த சருகுகளாக வீழ்ந்து மடியும் இச்சமூகம் ஷெட்யூல்டு வகுப்பிற் குரியவர்கள் அல்ல என்று மத்திய சர்க்கார் தங்கள் மாகாணங்களில் வசிப்பவரை எண்ணிக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள மருத்துவர்களை 'அவலை நினைத்து உரலை இடிப்பது'போல் ஷெட்யூல்டு வகுப்பில் சேர்க்க மறுப்பது மருத்துவர் நிலையைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதுதான். மத்திய சர்க்கார் மாகாண சர்க்காருக்குக் கொடுத்துள்ள வாக்குறுதியை (அதாவது மாகாண சர்க்கார் பிற்பட்ட வகுப்பினர் நிலவரத்தைத் தங்கள் உசிதம்போல் கணிக்க உரிமையுண்டென்று சொல்லும் வாய்மை) தமிழ் நாட்டு அரசாங்கம், மிக்க கீழ்நிலையிலுள்ள மருத்துவர் சலவைத் தொழிலாளர் சமூகத்தை ஷெட்யூல்டு வகுப்பில் சேரத் தகுதி யுடையவர்கள் என்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காமராஜர் சர்க்கார் சிபார்சு செய்யலாம் என எதிர்பார்க்கிறோம்.

மேலும் 20லட்சம் மக்கள் எண்ணிக்கையுள்ள மருத்துவர் சமூகத்திற்கு மத்திய சர்க்காரிலும் மாகாண சர்க்காரிலும் மக்கள் மன்றத்தில் இரண்டு இடங்களை ஒதுக்குவது தவறல்ல என்பதும் இச்சமூகம் கருதுகிறது. நீண்டநாள் கோரிக்கையை நமது முதல் அமைச்சர் பூர்த்தி செய்வார் என எதிர்பார்ப்போமாக.

"மக்கள் மன்றத்திற்கு"

M. ராஜகோபால்

வயலுக்கு நாற்றங்கால் தேவைப்படுகிறது! கிணற்றுக்கு நீர் ஊற்று அவசியம்! நல்ல படைக்கு, படைக்கலன்கள் அளிக்கும் உலைக்கூடம் அவசியம்! முடிதிருத்தும் மக்களுக்கு, சிறந்த முடிதிருத்தும் கருவிகள் தேவைப்படுகின்றன! அது போலத்தான் மருத்துவ மக்களுக்கும், அவர்களுக்கென்று, மருத்துவ மக்களின் பெருமையையும், முடிதிருத்தும் கலையின்

சிறப்பினையும் இன்னிசையாளர்களின் இசைச் சிறப்பினையும் மக்கள் மன்றத்திற்கும், ஆட்சியாளர்களுக்கும் தெரியப்படுத்தப் பத்திரிகைகள் தேவைப்படுகின்றன. அதைப் பொறுப்புடன் ஏற்று நடத்த ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

அதுபோலவே, வானத்தில் பல நட்சத்திரங்கள் இருக்கின்றன; ஆனால் ஒரே ஒரு நிலவுதான் சுடர்விட்டு ஒளி தருகின்றது. வையகத்தில் பல மலைகள் இருக்கின்றன; ஆனால் இமயத்தின் மதிப்பு மற்றவைகளுக்கு வருவதில்லை. தமிழகத்தில் பலஆறுகள் ஓடுகின்றன; ஆனால் அவற்றில் காவிரிக்கு இருக்கும் சிறப்பு வேறு எதற்கும் இருப்பதில்லை. தமிழகத்திலும் அமைச்சர்கள் சிறப்பாக ஆட்சி நடத்துகின்றனர்; ஆனால் கனம் காமராசைப்போல் ஆட்சி நடத்தக் கிடைப்பது அரிது. தென்னகத் திரைப்பட உலகில் ஒப்பரிய நடிகமணிகள் பலர் இருக்கின்றனர்; ஆனால் நடிகர் திலகம் போல் நடிக்க முடியாது. அதேபோன்று; மருத்துவ மக்களிலும், திறமை மிகு தீரர்கள் பலர் இருந்தும், அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக—மக்கள் மத்தியில் அன்பால் வளர்ந்து—அறிவால் சிறந்து, பண்பால் உயர்ந்து, பகுத்தறிவில் விளங்கிப் பவனி வரும் திரு. எம். ஏ. இராமகிருஷ்ணன் அவர்கள் தமிழ் நாடு மாநில மருத்துவர் மத்திய சங்கப் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்து வருவது, தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரிந்ததே.

அதே பொதுச் செயலாளர் தான் இப்பொழுது மருத்துவ மக்களுக்குப் புத்துணர் ஊட்டும் வகையில் "மருத்துவர் மன்றம்" என்ற தலைப்பிட்டு மாதந்தோறும் ஒரு நல்லிதழ் அளிக்க விரும்பி, தன்னுடைய பார்வையிலே நல்ல முறையில் அச்சிட்டு,யாரோ இரண்டுமூன்றுபேர் கையெழுத்துப் போட்டு நடத்தப்படும் காண்ட்ராக்ட் நாடகத்தைப் போல் அல்லாமல் மக்கள் மன்றம் விருப்பப்படி-புவியோரும், கோலோச்சும் குணாளர்களும் போற்றும்படி-இதழாசிரியராகப் பெற்று விளங்கும் திரு. எம். ஏ. இராமகிருஷ்ணன் அவர்களுக்கு, 'மக்கள் மன்றம்' சார்பாகவும் என் சார்பாகவும் அன்பு வாழ்த்து உரியதாகுக. "வாழ்க மருத்துவர் மன்றம்"

வணக்கம்.

வாழ்த்துரைகள்

ஆசிரியர் அவர்கள், மருத்துவர் மன்றம்.

அன்புடையீர் ! வணக்கம்.

'மருத்துவர் மன்றம்' திங்கள் வெளியீடு முதல்இதழ் பார்த்தேன். சிறந்த முயற்சி. என் நல்வாழ்த்துகள். பத்திரிகை மேலும் மேலும் வளர்ச்சி பெற்று மருத்துவ மக்களின் நலனுக்கு மட்டுமின்றி எல்லாரையும் ஒரு குலமாக்கும் குறிக்கோளில் வெற்றியடைய இறைவனை வேண்டுகிறேன்.

அன்பு.

ஔவைபுகழ் டி. **கே. ஷண்முகம்**

ஆசிரியர் அவர்கள், (தந்தி)

'மருத்துவர் மன்றம்' மக்கள் நல்ல ஆதரவை யென்றும் பெற்றுச் சேவைகள் பல செய்து நீடூழி வாழ்க.

A. இராமசாமி,
களத்துறை, இலங்கை.

ஆசிரியர் அவர்கள்,

மருத்துவர் மன்றம் திங்கள் இதழ் இந்நாட்டு மருத்துவப் பழங்குடியினர் தம் நல்வாவிற்கும் பண்பிற்கும் கலைவளர்ச்சிக்கும் பலனுறத் திகழ்ந்து வானுற ஓங்கிவளர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

எஸ். வி. கிருஷ்ணசாமி. பவானி.

வாழ்க மருத்துவர் மன்றம்.

வளரும் விஞ்ஞான காலத்தைப்போல மருத்துவர் மன்றமும் வளர்ந்து மக்களுக்கு நல்ல கருத்தைப் புகுத்தி ஒற்றுமையை வளர்க்கும் என நம்புகிறோம்.

L. **கருப்பையா**, இராமநாதபுரம்.

'மருத்துவர் மன்றம்' சமூக வளர்ச்சிக்கும் கலை முன்னேற்றத்திற்கும் பணிசெய்து நாட்டுக்கொரு நல்ல சமூகமாகத்

திகழ எல்லாவகையிலும் பணிபுரிய வேண்டுமென எண்ணி வாழ்த்துகிறோம்.

நாதஸ்வரம் P. G. **கதிர்வேலு, விழுப்புரம்.**

மக்களின் பேதமையை நீக்கி, ஊக்கம் ஒற்றுமையை வளர்த்து, நாட்டிற்கொரு நல்ல சமூகமாகத் திகழ 'மருத்துவர் மன்றம்' தோன்றியதற்கு மகிழ்ச்சி யடைகிறோம். **வாழ்க.**

N. அங்கமுத்து, காங்கேயம்.

'மருத்துவர் மன்றம்' இந்திய சுதந்திர விழாவில் வெளியிடும் பாக்கியம் கிட்டியதற்கு மகிழ்ச்சி. மக்கள் சேவையில் மன்றம் முழுப்பணியும் எடுத்து மருத்துவ சமூகம் மட்டுமின்றித் தமிழ் மக்கள் மன்றமாகவே திகழப் பிரார்த்திக்கிறேன்.

வே. ஆறுமுகம், திண்டிவனம்.

தொழிலாளர் வாழ்வு தேய்கிறது

முகில்வண்ணன்

1. முடியைத் திருத்தி அழகாக்கி
முகத்தைக் கலையின் ஒளியாக்கி
காதல் கிழத்தி கண்ணாலே
கண்டு களிப்பது உன்னாலே.

* * * * *

2. கண்ணின் புருவை வில்லாக்கி
கருவிழி மலர்ந்து கணையாகி
குவிந்த உதட்டில் கருமீசை
கோதையை மயக்குவது உன்னாலே.

* * * * *

3. கண்ணும் கண்ணும் பார்த்தாலும்
காதல் கதையைச் சொன்னாலும்
துள்ளும் கெண்டை மீசையதே
தோகையர் மயலை எழுப்பிடுதே.

* * * * *

4. அழகைவடித்த கலைஞனும் நீ,
அன்பை வளர்த்த அறிஞனும் நீ
துன்பம் கண்ட மக்களுக்கு
துயரம் நீக்கும் மருத்துவன் நீ.

* * * * *

5. ஊருக்கு ஒன்றும் பழத்தோட்டம்,
உதிரியாய் நின்றது மாதுளையே
தனித்து பழுத்த கனியதனை
பிளந்து ரசித்து புசித்தபின்பு

* * * * *

6. சுளை இழந்த தோலதனை
தூக்கிவீசி எறிந்தது போல்
கலையின் பணிகள் முடிந்தபின்னே
கதலித் தோலாய் எறிந்தனரே.

* * * * *

7. இனத்தை இழித்துப் பேசுவதும்
கணத்தில் நன்மை வேண்டுவதும்
கொட்டையை நட்டுச் செடியாக்கி
கண்ணைக் கட்டிக் காயாக்கி.

* * * * *

8. கையில் கொடுக்கும் கழைக்கூத்தன்
மக்களை ஏய்த்து மறைவது போல்
மக்கள் தொண்டர் இல்லையடா.
மனதை விழித்துச் சொல்லாயடா.

* * * * *

9. அருணன் உதிக்கும் வேளையிலே
ஆசை மனைவி தூங்கையிலே
காகம் கரையா நேரத்திலே
கடைக்குச் செல்லும் தொழிலாளி.

* * * * *

10. அருணன் மறைந்து வெகுநேரம்
ஆந்தை அலரும் நடுச்சாமம்
கள்ளன் போல மெள்ளவந்து
கதவைத் தட்டும் பரிதாபம்.

* * * * *

11. உண்ணு வதற்கு ஒரு நேரம்
உறங்கு வதற்கு ஒரு நேரம்
வேலை இயங்குவதற்கு ஒரு நேரம்
ஒய்வு பெறுவதற்கு ஒரு நேரம்.

* * * * *

12. இயற்றி வைத்தவன் நீயே தான்
எதிர்ப்பு தருவதும் நீயே தான்
கற் பிளந்தார் நெஞ்சம்போல்
காட்சி யளிப்பவன் நீயேதான்.

* * * * *

13. தொழிலா ளர்குறை காண்பதுவும்
தூற்றித் தூற்றிப் பேசுவதும்
முதலா ளிகுறை காண்பதுவும்
முழுதும் குறைத்துப் பேசுவதும்

* * * * *

14. பண்ணும் தொழில் நீயே தான்
பணத்திற் குரியவன் நீயேதான்
பணமி ருந்தால் முதலாளி
பணங்கு றைந்தால் தொழிலாளி.

* * * * *

15. தொழிலும் முதலும் ஒன்றேதான்
தூற்றிக் கொள்வதும் நீயேதான்
மாற்றி யமைப்பாய் தொழில் திட்டம்
வாழ்க்கையில் காண்பாய் பணத்தோட்டம்.

* * * * *

16. வரன்முறை யில்லாத் தொழில் நேரம்
வகுத்துக் கொள்ளடா ஒரு நேரம்
சிரத்தை கொள்ளடா பல நாட்கள்
செல்வம் கொழிக்கும் வெகுநாட்கள்.

* * * * *

17. புறம் பேசிம கிழ்ந்திடுவாய்
புனிதன் போல நடித்திடுவாய்
கணத்தில் மறையும் பெருமைக்காக
இனத்தைக் கலைத்து மகிழ்ந்திடுவாய்.

* * * * *

18. கண்ணால் கண்ட தெதுவுமில்லை
கருத்தால் நினைக்க வழியுமில்லை
உண்மை அறிய வொட்டாமல்
மக்கள் உறவைக் குலைக்க முயலுகிறாய்.

* * * * *

19. பொறாமை இருளே புகலிடமாய்
புற்றில் உறங்கும் பாம்பாக
ஒற்றுமை யாய்வரும் சிற்றெறும்பை
ஒன்று ஒன்றாய்க் கொத்துகிறாய்.

* * * * *

20. கயமை பேசிக் கலைத்திடுவோர்
கரும்பின் கட்டை அழித்திடுவார்
இழிவுச் செயலே எய்திடுவோர்' தம்
இன்பம் வேசி துன்பமதே.

* * * * *

21. வாராய் நண்பா ஒன்று சேர்
வயலில் நீர்கள் தேங்கிருக்கு
கொத்தி உழுது சேறாக்கி
குவலயம் புகழப் பயிராக்கி

* * * * *

22. விளைந்த நெல்லைப் பங்காக்கி
வறுமைக் கல்லைப் பொடியாக்கி
மடமை இருளைப் போக்கிடுவோம்
மனதை ஒன்றாய்ப் பிணைத்திடுவோம்.

சுகாதாரமும் : சுகவாழ்வும்

அனுபவ மருத்துவம்

மனிதன் தோற்றத்தில், அழகுபடுத்துவதில், நவநாகரீக மாகத் தோன்றுவதில் மட்டும் சுகாதாரம் அனுஷ்டித்து வரு வதாகப் பொருளல்ல. உண்பது, உடுத்துவது, குளிப்பது, நடப்பது, படுப்பது முதல் தன்னைச் சார்ந்த அன்றாடத் தேவை

களையும் சூழ்நிலைகளையும் சுகாதாரமாக வைத்துக் கொள்வது தான் சுகவாழ்வு.

கவனக்குறைவும் காலநஷ்டமும்

சென்னையைப் போன்ற மக்கள் நிறைந்த பெரும் நகரங்களில் மக்கள் வாழ்க்கையின் நேரத்திலும், பொருளிலும் மூன்றில் ஒருபாகம் நோய் நீக்கச் செலவழிக்கபடுகிறது என்று கூறுவது மிகைபடக் கூறுவதல்ல. நல்ல காற்றோட்டமும் விசாலம் பொருந்திய கிராமங்களில் நோய்களும் நோய் நீக்கும் மருத்துவரும், செலவுகளும் மிகமிகக் குறைவு. மக்கள் சுகாதாரத்திற்காகச் சர்க்கார் ஏராளமாகச் செலவு செய்கிறது. ஆனல் பலன் எதிர்பார்த்த அளவு கிடைப்பது இல்லை. இது கடப்பாரையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கிஷாயம் சாப்பிட்ட கதையாகத்தான் முடிகிறது. மக்கள் வாழ்வின் அடிப்படையிலேயே வியாதியை அழைத்துக் கொள்ளும் சூழ் நிலையைத் தன்னைச் சுற்றி ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனல் உண்டான வியாதிக்கு மருந்துண்டு. நோய் நீங்கிய பின்னும் மீண்டும் அந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தால் நோயால் தாக்கப்பட வேண்டி இருக்கிறது. அந்த அசுத்தமான சூழ் நிலையைத் திருத்துவதே இன்றைய பிரச்சனையே தவிர, டாக்டர்களையும் புதிய புதிய மருந்துகளையும் கண்டு பிடித்து அதிகப்படுத்தி வருவது வியாபார ரீதியிலே நோயை எதிர்ப்பார்ப்பதுபோலத் தானே தவிர நோயை அகற்றுவது அல்ல. அடிப்படையில் மக்கள் குடியிருப்புமுதல் தொழில் செய்யும் நிலவரைகள்வரை மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் வகைகளுக்கு அரசாங்கத்தோடு மக்களும் ஒத்துழைக்க வேண்டும். அதற்கு மக்கள் சுகாதாரத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். அந்த வாய்ப்பைப் புரிந்து கொள்ளவும், நோயற்று வாழவும் உலகில் தமிழன் அறிவில் மட்டுமின்றி, உடல்வலிமையும் நீண்ட வாழ்க்கையிலும் தனது முன்னேர்கள் அனுஷ்டித்த முறையை அறிந்து உலகிற்குக் காட்டவே 'மருத்துவர் மன்றம்' பூரணத் தியாகம் செய்ய முன்வந்துள்ளது. நாட்டில் பலப் பல கருத்துகளைப் பற்பல நாளிதழ் வார இதழ் மக்களுக்கு அறிவுறுத்துவது போல உடல்வலிமை, உயிர் வலிமை, உள்ளத் திண்மையைப் போதிப்பதே இதன் லட்சியம். இதன் தொடர்களை மக்கள் மாதந்தோறும் படித்து அதற்குத் தக்கபடி நடக்க வேண்டுமெனக் கேட்டுகொள்ளுகிறோம்.

உடலை வளர்க்கச் சத்துள்ள உணவு எவ்வளவு அவசியமோ, அதேபோல உயிரை வளர்க்கக் கட்டுப்பாடான திட்டங்

கள் தேவை. நினைத்ததும் பலன் கிட்டாது. 'எறும்பூரக் கற்றேயும்' என்பதுபோல ஒவ்வொரு நாளும் மறவாமல் அடியிற் கண்ட கடமைகளை அன்றாடம் அனுசரிப்பதே வெற்றியைத் தரும். பல துளிகள் தானே பெரு வெள்ளம்! ரோமாபுரி ஒரே நாளிலா கட்டப்பட்டது. பிறந்ததும் குழந்தை பேசிவிடுமா? இல்லை. ஆதலால் அவசரப்படாமல் நிதானத்தோடு செயலில் இறங்குங்கள். வெற்றி நமதே.

அமெரிக்காவிலுள்ள மிகப் பிரபல மருத்துவர்களையுடைய தேசிய ஆரோக்கிய சங்க வெளியீடு:

தினசரிக் கடமைகள்

1. காலையில் சூரிய உதயத்திற்குமுன் படுக்கையை விட்டு எழுந்து, வாயைக் கொப்பளித்து சுத்தமான வடிகட்டிய நீரையோ நீராகாரத்தையோ (இரவு சோற்றில் ஊறிய தண்ணீர்) குடியுங்கள்.

3. வயது வந்த இளைஞர்கள் நன்றாக வேர்வை வெளி வரும்வரை உடற்பயிற்சி செய்யுங்கள். வயது முதிர்ந்தவர்கள் உடற்பயிற்சி செய்ய முடியாதவர்கள் வேர்க்குமளவுக்குச் சுறு சுறுப்பாக நடந்து திரும்புங்கள்.

3. அன்றாட மலங்கழியுமுன் ஆகாரம் எடுத்துக் கொள்ளாதீர்கள்.

4. எப்பொழுதும் ஆழ்ந்த மூச்சு எடுக்கப் பழகுங்கள். உயிர் ஆற்றலுக்கு மிக முக்கியமானது இதுதான்.

5. நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் நிறைந்த அறையில் வசிக்கவேண்டும்.

6. நம் வேலையையும் பொழுதுபோக்கையும் திறந்த வெளியில் வைத்துக் கொள்ளுங்கள்.

7. வீட்டுக்கு வெளியே தூங்குவது நலம்.

8. நடக்கும்போதும் நிற்கும்போதும் உட்காரும்போதும் மார்பை நிமிர்த்தி இருக்கப் பழகவேண்டும் என்பது முக்கியமானது.

9. காப்பி, டீ, கொக்கோ போன்றவைகளும் உணர்ச்சியைக் கவரும் மதுபானங்களையும் அறவே நீக்குங்கள்.

10. பெருந்தீனி தின்பதையும் பசியில்லாதபோது உண்பதையும் நினைத்த நேரமெல்லாம் தின்று கொண்டிருப்பதையும் அறவே ஒழியுங்கள்.

11. மாமிசத்தையும் காரம் சேர்ந்த உணவுகளையும் குறைத்துக் கொள்ளவேண்டும். முடிந்தால் அறவே நீக்கிவிடுங்கள்.

12. எந்த ஆகாரத்தையும் நன்ருக மென்று மெதுவாக உண்ணவும். (நொறுங்கத் தின்ருல் நூறு வயது வாழ்வாய் என்பது ஒரு பழமொழி)

13. பல் ஈறுகளை எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆல், வேலன், வேம்புக் குச்சிகள் மிகச் சிறந்தவை. பல் பிரஷ்களை உபயோகப்படுத்துவது பிரயோசனப் படவில்லை.

14. அளவுக்கு மீறிய வேலை செய்யக்கூடாது. வேலைக்குத் தக்க ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். எட்டுமணி நேரம் ஆழ்ந்து தூங்க வேண்டும்.

15. கோபம் கவலை நீக்கி, என்றும் சாந்தமான எண்ணங்களோடு இனிமையாகப் பேசி இன்புற்றிருப்பதே நீண்டநாள் வாழ்வதற்கு அடிப்படையான கடமைகள்.

பேச்சு நயம்

(புலவர் தணிகை உலகநாதன்)

நயம்பட உரை :

தமிழ் இனிய மொழி; பேசுவதற்கும் இனியது; நினைப்பதற்கும் இனியது; எழுதுவதற்கும் இனியது. இப்படிப்பட்ட அருமையான மொழியை நாம் தாய் மொழியாகப் பெற்றதற்குப் பெருமைப்பட வேண்டும். தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பெற்றவர் இனிமையாகவே என்றும் பேசக் கடமைப்பட்டவர் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை இனிமையாகப் பேசுவதிலும் நயம்படப் பேசுதல் ஒரு கலை. காலமும் இடமும் அறிந்து கேட்பவர் உள்ளம் மகிழும் வண்ணம் பேசுவது பேச்சுநயம் வல்லவர்க்கே முடியும்.

பேச்சு நயத்தின் பிறப்பு :

பேச்சு நயம் எப்படி உண்டாகும். சிலர் பேசும்போது இருபொருள் உண்டாகுமாறு சிலேடையாகப் பேசுவர்; சிலர் கேட்பவர் எதிர் பார்ப்பதற்கு மாருக ஒரு பொருளைக்

கூறுவர்; சிலர் எதுகை மோனை நயம் தோன்ற அடுக்கடுக்காகச் சொற்களைக் கூறிக் கேட்பவர் உள்ளத்தைக் கவர்வர்; சிலர் நகைச்சுவை நிறைந்த செய்திகளைத் தம் பேச்சில் பின்னிப் பேசி மகிழ்விப்பார்கள்.

பேச்சுநயத்தின் பெருமை :

இத்தகைய பேச்சுநயம் மிக்க அறிஞர்களிடம் உலகம் ஒரு தனி மதிப்பைக் காட்டும். பேச்சு நயமுடையாரின் நா அசைந்தால் நாடு அசையும்.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

என்னும் வள்ளுவரின் சொல்லமுதம் இக்கருத்தை வலியுறுத்துவதாகும். பேச்சுநயம் மிக்கவர்களே நாட்டை ஆண்ட காலமும் உண்டு. உரோமாபுரியின் மன்னர் சீசர், அவர் தம் அருமை நண்பன் ஆண்டனி, கிரேக்க தத்துவ ஞானி 'சாக்ரடீஸ்' ஆகியோர் பேச்சு நயமிக்கவர் என்பதை உலகம் அறியும். அத்தகைய பேச்சுநயம் வல்லார் பலர் தமிழ் நாட்டிலும் வாழ்ந்து வந்தனர்; வாழ்ந்து வருகின்றனர். ஔவையார், கோவூர் கிழார், காளமேகம், இரட்டையர் முதலிய பெரும் புலவர்கள் தம் பேச்சு நயத்தால் அரசர்கள் தவறான வழியில் சென்றபோது அவர்களைத் தடுத்து நல்வழிப்படுத்தினர். பெருமன்னர்களிடையே நேர இருந்த கொடும் போர்களை விலக்கினர். மக்களின் நல்வாழ்வு கருதியும் அறவுரைகள் பலவற்றை நயம்பட எடுத்துக் கூறினர். தமிழ் அறிஞர் பெருமக்கள் சிலரின் பேச்சு நயத்துக்குச் சில எடுத்துக் காட்டுகளை இங்கே காண்போம்.

வேலும் புலியும் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை என்பது ஒரு பெரிய ஜமீன். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதனை ஆண்டுவந்த அரசர் சிறந்த தமிழ் அறிஞர். அவர் அடிக்கடி தம் அவையில் தமிழ்ப் புலவர்களைக் கூட்டி, அவர்களுடன் கலந்து பேசித் தமிழ் இன்பத்தைச் சுவைப்பது வழக்கம். அவருடைய அரசவைப் புலவர் **வேல் கவிராயர்** என்பவர். அவ்வூரில் **புலிக்குட்டிக் கவிராயர்** என்னும் தமிழ்ப்புலவர் ஒருவரும் இருந்தார். ஒருநாள் புலிக்குட்டிக் கவிராயர் அரசரைக் காண அரண்மனை அடைந்தார். அங்கு வாயிற் காவலனை நோக்கி, "அரசரிடம் சென்று புலிக்குட்டி வந்திருக்கிறது என்று

தெரிவிப்பாயாக" என்றார். காவலன் அவ்வாறே தெரிவித்தான். உடனே அரசர், 'இங்கு வேல் இருக்கிறது; பயமில்லையென்றால் புலிக் குட்டி வரலாம்' என்று நயம்படப் பேசிப் புலவரை அழைத்து வருமாறு காவலனிடம் கூறினார். வேல் என்பது வேல் கவிராயரைக் குறிக்கும். மன்னன் மறுமொழி கேட்ட புலிக்குட்டிக் கவிராயர் மனம் மகிழ்ந்தார். புன்னகை தவழ மன்னனைக் கண்டு இன்புற்றார்.

பனிக்காலம் நன்று :

மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் ஒரு பேரறிஞர். சொல்லழகும் பொருளழகும் நிறைந்த தல புராணங்கள் பல அவரால் இயற்றப்பட்டவை. அவர் பேச்சில் எப்போதும் சிலேடை நயம் நிரம்பி இருக்கும். ஒரு சமயம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரைச் சந்தித்து அளவளாவிக் கொண்டிருந்தார். அப்போது மார்கழி மாதம். பனி கடுமையாக இருந்தது. ஆறுமுகநாவலர் பனியின் கொடுமையை எண்ணி, 'பனிக் காலம் கொடியது' என்றார். அதுகேட்ட பிள்ளையவர்கள், 'ஆமாம்! பனிக் காலம் நல்லது' என்றார். பக்கத்திலிருந்வர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒன்றும் புரியவில்லை. உடனே பிள்ளையவர்கள், "நான் கூறியது உங்களுக்கு விளங்கவில்லை போலும்! நாவலர் சொன்ன கருத்தை நான் ஒன்றும் மறுக்கவில்லையே. 'பனிக்கு ஆலம் நல்லது' என்று என்று கூறினேன். ஆலம் என்றால் விஷம். விஷம் தன்னை உண்டவருக்கே துன்பம் கொடுக்கும்; ஆனால் இந்தப் பனியோ, எல்லோருக்குமே துன்பம் தருகிறது. ஆகையால் பனியின் கொடுமையை எண்ணிப் பார்த்தால் ஆலம் (விஷம்) நல்லதாகத் தோன்றுகிறதல்லவா? என்றார். அதுகேட்டு எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள்.

மாசம் பத்து ;

சொக்கநாதப் பிள்ளை என்பவர் ஒரு தமிழ்ப் புலவர். அவரது இல்லம் எப்போதும் வறுமையில் ஆழ்ந்திருந்தது. ஆனால் அவரது உள்ளமோ என்றும் தமிழ் இன்பத்தில் திளைத்திருந்தது. அவர் தம் வறுமையை ஒருவாறு போக்க ஓரிடத்தில் வேலைக்கு அமர்ந்திருந்தார். அப்போது அவருக்கு மாதச் சம்பளம் பத்து ரூபாதான். ஒருமுறை சொக்கநாதப் பிள்ளையின் நண்பர் ஒருவர், "உங்களுக்கு வேலையில் எவ்வளவு கிடைக்கிறது?" என்று கேட்டார். அதற்கு அவர்,

"எனக்கு மா சம்பத்து கிடைக்கிறது" என்று கூறிப் புன் சிரிப்புச் சிரித்தார். மாசம் பத்து என்னும் தொடரில் மாசம் பத்து (ரூபாய்) என்னும் உண்மையான பொருளும் மா சம்பத்து (பெரும் செல்வம்) என்னும் நயமான பொருளும் அடங்கி இருப்பதை நினைத்துப் பார்த்தால் நமக்கே சிரிப்பு வருகிற தல்லவா ?

சொல்லின் செல்வர் :

ஒரு சமயம் சென்னைக் கோகலே மண்டபத்தில் சொல்லின் செல்வர் டாக்டர் சேதுப்பிள்ளை அவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அதில் பாராட்டிப் பேசிய அறிஞர் ஒருவர், "சொல்லின் செல்வராகிய சேதுப்பிள்ளையைச் சொல்லின் செல்வராகிய நானும் பாராட்ட நேர்ந்தது மிகவும் பொருத்தமே!" என்றார். சபையில் உள்ளவர்கள் எல்லோரும் ஒன்றும் தோன்றாமல் விழித்தார்கள். உடனே பேச்சாளர், "என்ன புரியவில்லையா ? நான் பேச்சாற்றல் இல்லாதவன். நான் சொல்லின் மக்கள் எழுந்து செல்வர் ; அதனால் நானும் ஒரு சொல்லின் செல்வரே" என்றார். மக்களின் கைதட்டல் வானைப் பிளந்தது.

காசா லேசா :

புலவர் ஒருவர் ஒரு பெருஞ் செல்வனை நாடிப் பொருள் உதவி செய்யும்படி வேண்டினார். அவனோ எச்சில் கையால் கூட ஈ, காக்கை ஓட்டாத உலோபி. புலவர் அவனை 'இந்திரனே ; சந்திரனே !' என்று வானத்தில் தூக்கி வைத்தார். அதற்கு அந்தச் செல்வன்," என்ன ஐயா புலவரே ! என்னை ஏன் இப்படி நச்சரிக்கிறீர்கள். நான் என்மீது உம்மை பாட்டுப்பாடும்படி அழைத்தேனா ? உம்மைப் போன்றவர்களுக்கு வாரிவாரிக் கொடுக்க இங்குப் பணம் மரத்திலேயா காய்க்கிறது ? இங்கிருந்து வந்த வழியே போய்விடும். உமக்கு ஒரு சல்லிக் காசுகூடக் கொடுக்கமாட்டேன். "காசா லேசா?" என்று கடிந்து கூறினான். அதைக் கேட்ட பாவலர் சிறிதும் தயங்காமல் "ஆமாம் அப்பா, காசாலே சா" என்று சொல்லிவிட்டு அவன் வீட்டைவிட்டு வெளியேறினார். இதில், "நீ காசாலே சா அதாவது காசாலேயே நீ சாவாய்" என்னும் பொருள் அமைத்துப் புலவர் கூறிய வசைமொழி கற்பவருக்குக் களி விருந்தாகும்.

சீநிவாசன் :

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லவர். அவர் பேச்சுநயம் மிக்க

பேரறிஞர். சிலேடையாகவும் பேச வல்லவர். ஒருமுறை, அவர், தம் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அங்கே இரவு உணவுக்குப் பிறகு அவருடைய நண்பர் அவருக்குக் குடிக்கப் பால் கொண்டுவந்து தந்தார். பால் குவளையைக் கையில் வாங்கிக்கொண்ட பண்டிதமணி, அதை ஒரு முறை உற்றுப் பார்த்துவிடடுத் "திருப்பாற்கடலில் சீநிவாசன் துயில் கொள்ளுகிருன்" என்று கூறிச் சிரித்தார். அங்கிருந்த யாவரும் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். உடனே பண்டிதமணி பாலில் எறும்பு விழுந்திருப்பதைக் காட்டி, "சிறிய எறும்புக்கு இந்தக் குவளைப்பால் பாற்கடலே யாகும். சீனி என்பது சர்க்கரை, பாலுக்குப் போடப்படும் சீனியில் வாசம் செய்யும் எறும்பு சீனிவாசன் அல்லவா?" என்று விளக்கினர். எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தனர்.

பெண்மணி :

மற்றொருமுறை, பண்டிதமணி சென்னையில் ஒரு பெருங் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார். அப்போது பெண்கள் அமர்ந்திருந்த பக்கமிருந்து ஓயாத கூச்சல் ஏற்பட்டது. எவ்வளவு அடக்கியும் ஒலி அடங்கவில்லை. பண்டிதமணி ஒலி பெருக்கியில் "பெண்மணிகள் தானே! அவை ஒலித்துக் கொண்டே யிருக்கும்," எனக் கணீரென்று கூறினர். கூட்டத்தார் அனைவரும் நகைத்தனர். பிறகு அமைதி ஏற்பட்டது.

இவ்வாறு செந்தமிழ்ப் புலவர்களின் பேச்சிலே சிந்திய நயமான நகைச்சுவை முத்துக்கள் பலப்பல உண்டு. அவற்றைப் படித்துப் படித்துப் பரவச மடைவோமாக.

தமிழ்மலர்ச் சோலை

"நான் கண்ட மொழிகளிலே தமிழ்மொழிபோல் எங்கும் காணேன்" என்ற பாரதியின் அமுதமொழி தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் தமிழின் சிறப்பைக் கூறி நிலை நிறுத்துகிறது. கடல்கொண்ட லெமூரியா கண்டத்தில் பல தமிழ்க் காவியங்கள் மறைந்திருக்கலாம் எனத் தமிழ் ஆராய்ச்சி வல்லுநர் கூறுகிருர்கள். எஞ்சிய தமிழ்ப் பெரும் காவியங்கள் இன்று தமிழனுக்கும் தமிழ் மொழிக்கும் எதிர்காலச் சிறப்பை அளிக்கின்றன. அத்தகைய சிறப்பளிக்கும் காவியங்களில் நைடதமும் ஒன்று. இந் நைடதம் பாண்டிய நாட்டு அரசரில்

ஒருவரான அதிவீரராம பாண்டியன் என்ற மன்னரால் எழுதப்பட்டுள்ளது. அதன் சுவையைக் கேளுங்கள்.

'ஒழுகு தீம்புனல் சிறைசெயு மோதையு முழுநர்
குழுவின் சும்மையு முழத்தியர் குரவையி னார்ப்பும்
கழனி வாழ்கென வான்முளை வித்துனர் களிப்பும்
மழைமு ழக்கொடு மாறுகொண் டொலித்தன மாதோ.'

பெருகி யோடுகின்ற மதுரம் பொருந்திய நீரைக் கரைகோலித் தடுப்பதனால் உண்டாகும் ஓசையும், ஏர் உழுகின்றவருடைய கூட்டத்தினது ஓசையும், கடைசியரது குரவைக் கூத்தினது ஓசையும், வயல்களானவை வாழ்கவென்று வெள்ளிய நெல் முளைகளை விதைக்கின்றவருடைய ஓசையும் மேகத்தினது ஓசையுடனே பகைகொண்டு முழங்கினவாம்.

கற்பனையென்னும் இன்ப ஊற்று, கரையின்றி ஓடிக் கொண்டிருக்கிறது. அப்பகுதியைத் தொடர்ந்து பாருங்கள்.

திருவாசகத்தைப்பற்றி

ஒரு புலவர்

(வி. சோமசுந்திர முதலியார் தொகுத்தவை)

வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.
வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்அது நானடைதல் வியப்பன்றே.

நாட்டு விழா

(குருகுலம் அழகரடிகள்)

பெரும்பாலும் :

நாட்டுப் புறங்களில் தெய்வ அன்பு என்பது பெரும்பாலும் சிறுதேவதை வழிபாடாகவே நிகழ்கின்றது. கடவுள் இலக்கணம் அறிந்து அதற்கேற்ற முறையில் வழிபாடு செய்வதைப் பெரும்பாலும் அம்மக்கள் அறியார்.

மழையை :

வாழ்வுக்கும் உழுதொழிலுக்குங் காரணமான மழையை 'மாரியம்மன்' என்றும், மழை பெய்தபின் கங்கு என்னும் கரைவரம்பில் தேங்கிநிற்கும் நீரைக் 'கங்கையம்மன்' என்றும், அந்நீர் வயற்கால்களிற் பாய்ந்து தானியங்களாய் வரும் விளைவைச் 'செல்வியம்மன்' என்றும் அவ்வப்பொருள் களில் விளங்குந் தெய்வ வல்லமை கருதி வழிபாட்டு முன்னிலைகள் அமைந்தன.

கோயிலும் :

இதற்காக, மழைக்கு ஒரு வகையிற் காரணமாயிருக்கும் தோப்புகளில் மாரியம்மன் கோயிலும், கரைகட்டி நீர் தேங் கும் ஏரிக்கரை முதலிய நீர்நிலைப் பாங்கரில் 'கங்கையம்மன்' கோயிலும், தானியம் விளையும் வயல்களின் திட்டில் 'செல்வி யம்மன்' கோயிலும் தோன்றி வழிபாடுகளும் விழாக்களும் நடப்பது வழக்கமாயிற்று.

இந்திர விழா :

இவை யவ்வளவும் மழையின் வல்லமையாய் 'வான் சிறப்பு' என்பதில் அடங்கிவிடும். மழையின் வல்லமையைப் போற்றுதலால் இவற்றின் விழாக்கள், மழைக்காலமும் உழவுத் தொழிலும் தொடங்கும் ஆடித் திங்களில் நிகழ்தல் காணலாம். மழை விழா என்னும் இந்த 'இந்திர விழா' நாட்டு மக்களுக்கு ஒரு கோலாகல விழா!

பொங்கல் விழா :

ஆடித் திங்கள் என்பது ஞாயிறு தென்முகங் கொள்ளும் பருவம் (தக்ஷிணயணம்); இக்காலத்தில் மழைவிழா நடத்தி உழவு தொடங்கும் மக்கள், தம்முடைய ஆறு மாத உழைப் பிற் காணும் பயன்கள் கொண்டு, ஞாயிறு மீண்டும் வடமுகங் கொள்ளும் (உத்தராயணப்) பருவத் தொடக்கமாகிய தைத் திங்கள் முதலில் 'பொங்கற் பெருவிழா' அயர்தலும் வழக்கமாயிற்று.

ஆடியும் தையும் :

ஆண்டுதோறும் இப்படி இருபெரும் விழாக்கள் ஆறு மாதங்களுக் கொருமுறை தமிழகத்தில் நிகழ்ந்துவருகின்றன. ஆடியும் தையும் இவ்வாறு அயனத் தொடக்க மாதங்களாக முதன்மையுறுதலால், அந்த மாதங்களில் வரும் 'அமாவாசை'

'கிருத்திகை' 'நோன்பு' முதலியனவும், 'ஆடி அமாவாசை', 'ஆடிக் கிருத்திகை', 'ஆடி நோன்பு', 'தை அமாவாசை', 'தைக் கிருத்திகை', 'தை நோன்பு', எனச் சிறப்பாகக் கொள்ளப்பெறுகின்றன.

பூரமும் பூசமும் :

மழை என்பது பெண்மையின் மென்மையும், ஞாயிறு ஆண்மையின் ஆற்றலும் வாய்ந்தவை; ஆதலால், மழை தொடங்கும் ஆடிமாதம் 'ஆடிப்பூரம்' என்னும் அம்மை வழிபாடும் ஞாயிறு ஒளி சிறக்கும் தைமாதம் 'தைப்பூசம்' என்னும் அப்பன் வழிபாடுங்கூட நிகழ்ந்து வருகின்றன.

மாசு விழா :

மழை விழா மிகவும் தூயவிழா; அது நீர் விழாவாகவும் தானிய விழாவாகவும் நடப்பதற்குரியது. 'கூழ் வார்த்தல்' 'கும்பம் இடல்,' 'பொங்கல் வைத்தல்,' 'பானகம் கரைத்தல்' முதலிய நல்விழாவாகவே முதலில் தொடக்கம் பெற்றது. இடையில், ஊன்சுவை கண்டோர், தாம் விரும்பும் ஊனும் படைத்தெடுக்கத் துணிந்து விழாவை மாசுபடுத்திவிட்டனர். கடைசியில் அது வாயில்லா ஏழைச் சிற்றுயிர்களைச் சிறு தேவதைகளின் முன் பலியிடுங் கொலைகளில் வந்து முடிந்தது.

மாசில் விழா :

மழையில் விளங்குந் தெய்வ வல்லமைக்காக மழையையே தெய்வமாகத் தொழுதால் அது சிறுதேவதை வழிபாடாய் முடிந்துவிடும்; மழையின் வல்லமைக்கு வியந்து, அதற்கு மூலம் தெய்வ வல்லமை என்று தெளிந்து, எதைப் பார்த்தாலும் தெய்வத்தையே நினைந்து வழிபடுவதாயிருந்தால் அது முழுமுதற் கடவுள் வழிபாடாய் முடியும். மக்கள் முழுமுதற் கடவுள் வழிபாடாகவே ஆடியும் தையும் கொண்டாடவேண்டும் என்பதற்காகவே, 'ஆடிப்பூர' விழாவும் 'தைப்பூச' விழாவும் அந்தந்த மாதங்களில் அமைந்து நினைப்பூட்டி வருகின்றன.

ஸ்லோவேகியா தேசத்துப் பழமொழிகள்

(தொகுத்தவர் :—அன்புப்பழம் நீ)

1. சமையல்காரனும், வேலைக்காரனும் சண்டையிட்டால் நெய்யைத் திருடியவன் யாரென்று அறியலாம்.

2. எதிரி ஓடிவிட்டால் எவனும் வீரன்தான்.

3. தீரம் அக்னிபோன்றது; கொடுமை புகை போன்றது.

4. தீரமே வெற்றியின் குழந்தை; உடைவாள் அல்ல.

5. வாலறுந்த பிறகுதான் வாலின் மதிப்பு பசுவுக்குத் தெரியும்.

6. கோழை "நான் எதையும் ஆராய்ந்து செய்பவன்" என்பான். லோபி "நான் பணத்தைத் துர்வினியோகம் செய்வதில்லை" என்பான்.

7. கள்ளனை விட்டுவிட்டு, களவைத் திட்டுவது புத்திசாலித்தனமாகும்.

8. கிழக் காக்கை காரியமின்றிச் சாவதில்லை.

9. அண்டை வீட்டில் எட்டிப் பார்ப்பவன் கண்கள் வெகு நாளிராது.

10. வசை மொழிகள் ஊர்வலம் போன்றவை. ஆரம்பித்த இடத்திலேயே வந்து முடிகின்றன அல்லவா?

11. சபிக்கும் நாக்கு தாகத்தால் தவிக்கும்.

12. அவனுக்கு மனைவி வரும்வரையில்தான் அவனை 'என் மகன்' என்று சொல்லிக்கொள்ளலாம். ஆனல் பெண்ணைத்தான் ஆயுள் பரியந்தம் 'மகள்' என்று சொல்லிக் கொள்ள முடியும்.

13. தாய் மகளைப் பார்த்து, "நான் சொல்கிறேன்" என்பாள். அவளே நாட்டுப் பெண்ணைக் கூப்பிட்டு, 'இதைக் கேளடி', என்று கட்டளையிடுவாள்.

14. வெகு சிலருக்குத்தான் அதிர்ஷ்டமுண்டு. ஆனல் எல்லார்க்கும் மரணம் உண்டு.

15. ஆயுளின் இறுதியில் மரணத்தை வைத்தவன் ஆண்டவனுகத்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு யாருக்கு அவ்வளவு ஞானமுண்டு.

16. வயிற்றைக் கட்டினுல் கடன் அண்டாது.

17. சட்டையின் அழகு கத்திரியின் வாயசைப்பில் இருக்கிறது.

18. சொந்த ஊரில் அவன் பெயருக்கு மதிப்பு. அயலூரில் சட்டைக்குத்தான் மதிப்பு.

19. நாய் குரைக்காத ஊரில் குடியிருக்க வேண்டாம்.

20. பணச்சப்தம் கேட்கும்போது சொற்பொழிவாளரின் வாக்குக் காதில் விழாது.

21. ஒரு வண்டி அளவு கருங்கல்லைச் சுமக்கலாம். கை யளவு பொன்னை வைத்திருப்பது பெரியதொல்லை.

22. நீதிபதிகளுக்கு இரண்டு காதுகள் இருக்கவேண்டும்; அவை இரண்டும் சரிசமானமாக இருக்கவேண்டும்.

23. நல்ல விலை கொடுத்து, ஆயிர மைலுக்கப்பாலிருந்து வாங்கிவைத்த பொருளைத்தான் பெண்கள் போற்றுவர்.

24. தந்திரமற்ற வக்கீல், எருதில்லாத மிராசுதார், முதல் இல்லா வர்த்தகன் எல்லாரும் தரித்திரத்தின் செல்வர்கள்.

வைத்தியப் பகுதி

கீல்வாத ரோகங்களும் - சிகிச்சைகளும்

[RHEUMATISM, RHEUMATIC FEVER, GOUT, ARTHRITIS AND THEIR TREATMENTS.

Dr. A. E. சண்முகம்.

மானிடராய்ப் பிறப்பதரிது. அதிலும் நோய் நொடியின்றி மண்ணிடை வாழ்வதென்பது அரிதினும் அரிது. கீல் வாதம், மூட்டு வீக்கம் போன்ற பயங்கரமிக்க வியாதிகள் மானிடர்களைப் பற்றி உறவு கொண்டுவிட்டால் அப்புறம் அந்நோயாளி என்றென்றுமே நோயாளியாகவே வாழ்ந்து அல்லல் பட்டு நரக வேதனை அடைய நேரிடுகிறது. இவ்விதம் பயங்கர நோய்களில் இருந்து விடுபட நம் முன்னோர்கள் பல

மருந்துகளை வழங்கியுள்ளார்கள். விஞ்ஞான, வைத்தியமுறைகளில் (Scientifically and Medically) ஆராய்ச்சிகளின் மூலமும் புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு நவீன வைத்தியத் துறையில் கையாளப்படுகின்றன. நம் மருத்துவ நேயர்கள் அவ்வித மருந்துகளை அறிந்து நோய்களுக்குத் தக்கபடி ஷை மருந்துகளை உபயோகிக்கவே இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மருத்துவ நண்பர்கள் இவ்வித மருந்துகளைத் தங்கள் வைத்தியத் துறையில் கையாண்டு நன்மையடைவார்களாக.

ஆங்கிலத்தில் சில்வாதத்திற்கு 'ரூமாடிஸம்' என்பார்கள். ஆயுர் வேதத்தில் இதை 'ஆம வாதம்' என்பார்கள். சித்த வைத்தியத்தில் 'சில் பிடிப்பு, முடக்குவாதம்' என்பார்கள்.

மூட்டு வீக்கம் உண்டானல் தசைகளிலும் எலும்புகளிலும் அழற்சி கண்டு சுரமும் உண்டாகும். தசை நார்களில் வீக்கங் கண்டு தடித்து, காப்புக்காய்த்து சிறு முண்டுகளாகவும் தோன்றலாம். விஷக்கிருமி நுண்ணங்கள், தசை அலுப்பு, குளிர், ஈரம் இவைகளின் தாக்குதலாலும் அழற்சி அல்லது தாபிதம் (Inflamatlion) ஏற்படலாம். சில் வியாதி பெரும்பாலும் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் அதிலும் பெண்களைவிட ஆண்களுக்கும் அதிகமாக ஏற்படுகிறது. சீதோஷ்ண சுற்றுப்புற நிலைகளும் இதுவரக்காரணமாகலாம்.

இவ்வாதம் தசைகளைப் பாதித்தால் (Myalgia) என்பார்கள். இடுப்பு, தசைகளைப் பாதித்தால் (Lumbago) என்பார்கள். கழுத்துத் தசைகளைப் பீடித்தால் 'புறங்கழுத்து' வாதம் (Wry Neck) என்பார்கள்.

இந் நோய் 102° அல்லது 103° F சுரத்துடன் ஆரம்பித்து மூட்டில் வலி உண்டாகும். மூட்டில் வீக்கம் கண்டு சிவந்து கடுமையான வலி உண்டாகும். இந்நோய் சரிவரக் குணப்படுத்தா விட்டால் இருதயத்தையும் பாதிக்கலாம்.

சிகிச்சை முறை (பொது) நோயாளியைப் படுக்கையில் படுக்கவைத்து ஓய்வு எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டும். பால் கஞ்சி, பழரசம், தேநீர் (Tea) போன்றவைகளைத் தாராளமாய்த் தரலாம். சாராயம், அல்கஹால், பிராந்தி போன்ற மதுரசங்களைத் தரக்கூடாது. மலபந்தம் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எலுமிச்சம் பழரசம் கலந்த விளக்கெண்ணெய் தந்து மலம் கழியச் செய்யலாம். குளிர் தாக்காதபடி கம்பளியால் போர்த்த வேண்டும். மூட்டுக்களில் நீர்

கோர்த்துக் கொண்டால் வீக்கத்திற்குப் பிளாஸ்திரி கட்டுப் போடுவது (Adhesive Strapping) நல்லது.

விசேஷமாக பேதி உப்பு (Epsom Salt) ஒத்தடம் சுகம் தரும். மின்சார ஒத்தடமும் தரலாம். காய்கறிகள், பால், பழம், விட்டமின் சத்துக்கள் நிறையச் சேர்த்துக்கொள்ள லாம். வீங்கிய வலியுள்ள பாகங்களுக்கு (Massage) தேய்ப் புத் தரலாம். (Iodex with Methyl Saticylate, Relaxyl Ointment, Eutheria Rumalaya Cream, Finalgon) முதலிய களிம்புகள் மிக நல்லவைகளாகும். இவைகளைக் கொண்டு தேய்ப்பதால் வலி, வீக்கம் குறையும்.

மருத்துவ நண்பர்கள் நலம் அடையும் பொருட்டும், தங் கள் வைத்தியத் தொழிலில் வெற்றியும் நற்பெயரும் அடை யும் பொருட்டும் (1) ஆங்கில முறை (Modern Method (2) ஆயர்வேத முறை (3) சித்த வைத்திய முறை (4) ஹோமி யோபதி முறை (5) மூலிகை வைத்தியக் கலப்பு முறை (Herbal Remedies) ஆகிய இவ்வைந்து முறைகளிலும் சிகிச்சை முறைகள் தொகுத்துத்தரப்படும். அவரவர் தேவைக் குத் தக்கபடி மருந்துகளைத் தேர்ந்தெடுத்துச் சிகிச்சைகளைக் கையாண்டு நன்மைகள் அடைவார்களாக.

முதலில் ஆங்கில முறை மருத்துவத்தைக் கீழே தருகி றேன்.

சோடா சாலிஸிலேட் 10 நெல்லெடையிலிருந்து ஆரம் பித்து 40 அல்லது 60 நெல் எடை வரையில் ஒவ்வொரு நாளும் தரலாம். தினசரி இம்மாதிரி முதல் மூன்று நாள் தொடர்ச்சியாகத் தரலாம். நோயாளிகளுக்கு வேர்வை யுண்டானால் வேர்வை துடைத்து நீரில் (Eau De Cologne) யூடி கோலன் கலந்து உடலைத்துடைத்து வரலாம்.

மூட்டு வலி அதிகமாய் இருப்பின் கீழ்க் கண்ட மருந்து களைக் கொண்டு (Massage)த் தேய்ப்புத் தரலாம்.

1. Oil of Turpentine - டர்பன்டைன் எண்ணெய்,

2. நீலகிரி தைலமும் (Oil of Winter Green) ஆயிலும் கலந்து தேய்க்கலாம்.

3. (Liniment Terbenthene With Oil of Gaul Theria வும் தேய்க்கலாம்.

4. சிகிச்சை முறை (பொது)வில் கண்டுள்ள (Eutheria Finalgon, Iodex, Rumalaya Cream முதலியவைகளையும் உபயோகிக்கலாம்.

5. கீழ்க் கண்ட மருந்துகளைக் கலந்து தரச் செய்து தேய்க்கலாம். (Menthol ½ Dram, Lt. Aconite 2 Drams, Lt. Bello Donna 2 Drams, Methyl Salicylas Add 1 oz. Mix - Use Externally.

6. மற்றும் (Aspirin 15 Grams. Potash Carbonate 5 Grams.

மேலே கண்டவை ஒரு வேளைக்குப் போதுமானது. இதைப்போல 3 பொட்டலம் தரச் செய்து, தினசரி 3 வேளை வெந்நீரில் சாப்பிட்டுவர உடல் வலி, மூட்டு வலி நீங்கும்.

7. மேக வியாதிகளின் (Gonorrohea And Syphilis, விஷத்தினுல் உண்டான மூட்டு வீக்கம் கீல் பிடிப்பிற்குப் பொடாசியம் அயோடைடும், சோடா மாவும் (Soda Bicarb) கலந்து கொடுத்துவந்தால் நன்மையுண்டாகும்.

8. மூட்டு வலி கடுமையாக இருந்தால் (Pheno Barbi tone ½ Gr. Cdeine Phosphate ½ Gr). இவ்விரண்டும் கலந்து 4 மணிக்கொரு தரம் தரவும்.

9. மூட்டுக்களில் நீர் கோத்திருந்தால் குளிர்ந்த பாகத்தில் ஊசி குத்தி நீர் எடுத்து (Aspiration) அவ்வூசி குத்திய வழியாகவே (Procain Penicillin 4 Lacs உட்செலுத்தி விட நீர் கோர்ப்பது நின்றுவிடும்.

10. மலக்கட்டி நீடித்திருந்தால் பேதிக்குக் கொடுக்கலாம். பேதி மருந்து கொடுத்தும் மலக்கட்டி நீங்காவிடில் (Enema) எனிமா கொடுக்கலாம். பின்னர் புட்டத்தில் (Milk Injection with Iodine 5 CC. தசை ஊசி குத்தி, புஜத்தில் 4 Lacs Procain Penicillin) தசை ஊசி போட்டு (Soda Salicyles) சோடா சாலிஸிலேட் மிக்சரும் ஆஸ்ப்ரின் மாத்திரைகளும் சாப்பிடலாம். வலி மிகுதியாய் இருந்தால் (Trga pyrin) அல்லது (Butarin) மாத்திரைகளை ஒன்று வீதம் தினசரி மூன்று வேளை தரலாம். இவ்விதமாகச் சாப்பிட்டு வர ஒரு வாரத்தில் குணம் கிடைக்கும். இவைகளையே இஞ்சக்ஷன்களாகவும் புட்டத்தில் ஊசி குத்திக்கொள்ளலாம்.

11. கீல் வாத நோய்களுக்காகவே கீழ்க் கண்ட மருந்துகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அவைகளையும் டாக்டரின் அனுமதியின் பேரில் சாப்பிட்டுவரலாம்,

Butapyrin, Veganin, Salamide, Salicylamide with Vitanin C, Butazolidin, Millicorten Artonal, Salserp, Delta-Cortil, R. Compound Pyracortin, A. C. T. H. Vitamin C. Thilozone P. Dexaplon, Nisone, Rumalaya Tablets முதலியனவாம்.

12. தசை வலியுடன் கீல் வாதமும் இருந்தால் (Mepro-solone (indon) நல்லது.

13. நாட்பட்ட கீல் வாத வியாதிகளுக்கு (Metizin cum Cortisone, Butasolone (Indon) மிக மிக நல்லவைக ளாகும். சிற்சில சமயங்களில் வலி அதிகமாயிருப்பின் கீழ்க் கண்ட மருந்துகள் நன்மை தரும்.

14. Veganin Tabs 2, Asprin 20 Gr, Phenobarbitone ½ Gr Dovers Powder ½ Gr. Add lactos. S. Make 3 Powders—இம் மூன்று பவுடர்களையும் 4 மணிக் கொரு தரம் சாப்பிட்டு வெந்நீராவது, காபி, டீயாவது அருந் தலாம்.

15. ஈரல் வியாதி இல்லாமலிருந்தால் Cinchophen, 5 Gr. மாத்திரை சாப்பாட்டிற்குப் பின் 1 விழுங்கி ஒரு டம்ளர் ஜலத்தில் Sodo Bicarb 10 Gr, கலந்து சாப்பிட்டு வரவும். இம் மருந்து 2 நாள் தான் சாப்பிடலாம். பின்னர் வாரத்திற்கு 2 நாள் இம்மாதிரி சாப்பிட்டு வரப் பூரண குணம் கிடைக்கும்.

16. கீழ்க் கண்ட மருந்துகளும் உபயோகத்தில் உள்ள வையே அவை:

(a) Cinchophen 5 Gr,
Asprin 5 Gr,
Soda Bicarb 5 Gr,
} Make it one Powder. இவ்விதப் பவுடர்களைத் தின சரி 2 வேளை சாப்பிடலாம்.

(b) Colchicine Gr. $\frac{1}{10}$. Take one Dose Every 4 Hours for 2 Days in a week. மேல் கண்ட மருந்துகளைவிட இது சிறந்தமுறை.

(c) Cinchophen 2 Gr,
Colchicine 1/10 Gr,
Amidopyrine 1 Gr,
Calcium carbonate 1 Gr, - Make it one powder.

இவ்விதப் பவுடர்களைத் தினசரி 2 வீதம் சாப்பாட்டிற்குப் பின் சாப்பிட்டு வர நன்மை பயக்கும். மேலே விவரித்துள்ள மருந்துகள் ஆராய்ச்சியின் மூலம்கண்டு பிடிக்கப்பட்டு, பலருக்கும் கொடுக்கப்பட்டு நன்மை செய்தவையே இங்கு எழுதப்பட்டுள்ளவை. இவை அனுபவ மருந்துகள். நவீன வைத்தியத்தில் பேரும் புகழும் பெற்றவை. மருத்துவ நண்பர்கள் கால மறிந்து இவைகளைக் கையாண்டால் அவர்களின் வெற்றி நிச்சயம்.

குறிப்பு: அடுத்த இதழில் ஆயுர்வேத முறையைப் பற்றிய சிகிச்சை முறைகள் எழுதப்படும்.

முடி திருத்தும் தொழிலுக்கு ஆபத்து

தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்

(இளவழகன்)

முடிதிருத்தும் தொழில் செய்பவர் யாவரும் தொழிலாளர் பட்டியலைச் சேர்ந்தவரே யாவர். முதலுக் குரியவராயினும் தொழிலில் ஈடுபட்ட அனைவருக்கும் தொழில் பிரச்சினையான பொதுப் பிரச்சினை பொதுவானதே. சிறிய முதலைக் கொண்டு தொழிலாளி, முதலாளி ஆகலாம். முதலாளி தொழிலாளர் நிலைக்கும் வரலாம். உழைப்பிற் கேற்ற ஓய்வு; வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியம் என்பதே இன்றைய தொழில் புரட்சி. இது இருவருக்கும் பொதுவானது. கசந்தால் வேம்பு, இனித்தால் கரும்பு. சவுகரியப்பட்டால் முதலாளி. குறைந்தால் தொழிலாளி. இதுதான் இந்தச் சிறிய முடிதிருத்தும் தொழிலின் அடிப்படை. இந்த உண்மையை இருசாராரும் அறிந்து கொண்டும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையில்லாது முதலாளி தொழிலாளி என்ற பேதத்தை வளர்ப்பது, தகப்பன் மகன் உறவு முறைக்குள் ஏற்படும் சச்சரவாகும். இருவரும் மனமொத்துவந்து வாழ்க்கை நலனுக்கு வேண்டிய ஒரு தொழில் வரம்பை ஏற்படுத்திக் கொண்டு தொழிலையும் வாழ்க்கையையும் உயர்த்த வேண்டும் என்பதே இன்றைய பிரச்னையே தவிர விவாதத்திலும் வீண் பேச்சிலும் காலத்தை வீணுக்க வல்ல சங்கம். இன்று தொழிலாளர் நிலையைக் கவனிப்போம்.

தொழிலில் ஒழுங்குமுறை வேண்டும்

முடிதிருத்தும் தொழிலாளி எந்த ஒரு கடையிலும் நீண்ட நாள் வேலை செய்து சர்வீஸ் பெற்றவரைக் காண்பது மிக அரிது. மற்றத் தொழிலில் வேலை செய்யும் தொழிலாளர் களைவிட இம் முடிதிருத்தும் தொழிலாளர்கள் அடிக்கடி கடை மாறிக்கொண்டே இருப்பர். லீவு எடுத்துக் கொள்வ தென்ற ஒரு வரம்பு கிடையாது. நினைத்தால், தூங்கிவிட் டால், நண்பர்கள் சந்திப்பு ஏற்பட்டால் வேலைக்குப் போவதை நிறுத்திக் கேளிக்கையில் ஆழ்ந்து விடுவதுண்டு. வேலை செய்து கொண்டே இருந்து மத்தியானம் உணவருந்தப் போனவர் களும் காலையில் பசியாரப் போனவர்களும் திரும்பிவராமலே போய்விடுவதுண்டு. நூற்றுக்கு நான்கில் ஒரு பாகமாவது இந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். தொழிலிலே இவர்களுக்கு ஆர்வம் கிடையாது. இப்படிச் செல்பவர்கள் முதலாளியின் கொடுமையால் போவதாகத் தெரியவில்லை. அவர்களைக் கேட்டாலும் குறை சொல்வதில்லை. ஒரு முதலாளி யிடம் நீண்ட நாள் சர்வீஸ் உள்ளவர்கள் உண்டு. இவர் களை முதலாளிகள் சந்தேகக் கண் கொண்டுபார்த்தாலும் தனது வேலையைக் கவனமாகப் பார்த்துக்கொண்டு முதலாளி களின் விருப்பு வெறுப்பைப் பாராது காலங்கழிக்கும் தொழி லாளர்களும் உண்டு. காரணமின்றித் திடீரென வேலையை விட்டு நீக்கிவிடும் முதலாளியும் உண்டு. சொல்லாமலே போய்க் கொண்டிருக்கும் தொழிலாளியும் உண்டு. என்ன கொடுத் தாலும் குறைபாடும் தொழிலாளியுண்டு. எவ்வளவு வருவாய் வந்தாலும் எச்சில்கையால் காக்கை ஓட்டாத முதலாளியு முண்டு. மனித இனம் உற்பத்தியானபோது, காடு குகை களிலும் வாழ்ந்தபோது, திட்டம், ஒழுங்கு என்பதே இல்லாது வாழ்ந்தபோது, எப்படிப் பற்றுதல் இல்லாமலும் கண்டதே காட்சி கொண்டதே கோலமாக வாழ்ந்தார்களோ அந்தத் தத்துவப்படி தான் முடிதிருத்தும் தொழிலாளர் வாழ்க்கையில் காண்கிறோம். எல்லாத் தொழிலும் வரையரையாக வகுக்கப் பட்டு நடைமுறைக்கு வந்துள்ளது. ஆனல் இத்தொழிலுக்கு மட்டும் கிடைப்பது, முதலாளி நினைத்தால் இரவு 2 மணி வரைக்கு கடை திறந்திருக்கும்; தொழிலாளி நினைத்தால் சேர்ந்து பத்து நாளைக்கு வேலைக்கு வரமாட்டார். தீபாவளி, பொங்கலுக்குக் கூடக் கடை யடைக்கக் கண்ணீர் விடும் முத லாளி, இரண்டு காலம்பூராவும் வேலைசெய்ய விரும்பாது காலங் கழிக்கும் தொழிலாளர் உண்டு. இந்த வரன்முறை இல்லாத

ஒரு தொழில் வளர்ச்சி யடையுமா ? என்பதைச் சிந்தித்தவர் நம்மில் யாருமில்லை. சொன்னால் செவி சாய்ப்பவருமில்லை ; சாய்த்தாலும் செயலில் காட்டியவருமில்லை. இந்த மடுவிற்கும் மலைக்கும் உள்ள உறவில் வாழும் இத்தொழில் வளருமா? வளரத்தான் முடியுமா? லட்சியமில்லாத எந்த ஒரு மாபெரு சக்தியும் வெற்றி கண்டதுண்டா ?

அரசாங்கம் அலட்சியப் படுத்துகிறதே!

இந்த நிலையில் வாழும் நம்மைச் சர்க்கார் வகுத்து முதல் இரண்டாவது,மூன்றாவது வகுத்த ஐந்தாண்டுத்திட்டங்களிலே நாட்டிலுள்ள எல்லாக் கைத்தொழிலும் வளர்ச்சியடையத் திட்டம் வகுத்து மானியமும் கடன் உதவியும் அளிக்கிறது. இந்த முடிதிருத்தும் தொழில் மட்டும் எதிலும் சேராது. திரிசங்கு சுவர்க்கமென்பார்களே, அந்த நிலையில் கவனிப் பாரற்றுக் கதிகலங்கி நிற்கிறது. நாட்டிலே நடைபெறும் நெசவுத் தொழில், மரத் தொழில், தையல் தொழில், கொல்லத் தொழில்,மண்ணுடையார்தொழில், குடிசைத்தொழில் மற்றும் பல தொழில்களையும் பழையன கழித்தும், புதியன புகுத்தியும் கற்றோரும் மற்றோரும் போற்றி வரும் செயலைக் கண்ணாரக் கண்டும், காதாரக் கேட்டும் ‘கண்ணிருந்தும் குருடனாய்’க் ‘காதிருந்தும் செவிடனாய்’ விளங்கும் நம்நிலை நாளுக்கு நாள் நசித்துப் போவதைத் தவிர வேறென்ன காணமுடியும் ? என்பதைச் சிந்தியுங்கள்.

நீண்ட காலமாக மக்களால் ஒதுக்கப்பட்டுவந்த தொழிலாத லால் அதிகாரத்திற்கு வந்துள்ள எவரும் இதை அலட்சியப் படுத்தியே வருகிறார்கள். ஒரு தொழில் பொதுமக்கள் கவ னத்தை ஈர்ப்பதாயின் அதன் வளர்ச்சி உயர்வு இதிலிருந்து தான் ஏற்பட வேண்டும். நாம் மக்களுக்காகச் செய்யும் தொழிலே ஆயினும் மக்களின் அலட்சியத்திற்கு ஆளாகு வானேன்? கத்தரிக்காய் மலிந்தால் கடைக்குவந்துவிடும். விலை மலிவாகவும் காணும் இடம் எல்லாம் காட்சியளிப்பதுமான பொருள், மக்களைத் தேடிவரும் பொருள் யாவும் மதிப்பிற்கும் தரத்திற்கும் குறைவாகத் தான் காணப்படும். நமது தொழில் மரத்தடி,குப்பைமேட்டு ஓரம், திண்ணை, கொல்லைப்புறம், தெரு வடி, எங்கும் நமது தொழில்நிலையமாகக் கருதுவதும் சகாய மான மலிவான கட்டணம் வாங்குவதும், தொழிலில் நாம் காட் டும் அன்பு, பண்பெல்லாம் பயந்த சுபாவத்திலே வளைந்தும், நெளிந்தும், ஒதுங்கியும், சொறிந்தும்,இரந்து வாங்குவதுபோல நமது வாடிக்கைக்காரர்களிடம் நடந்துகொள்வதும், இதன்

தரக்குறைவைக் காட்டுகிறது. வியாபார முறையில் பேசும் பேச்சு, பண்பு, இணக்கம் இவைகள் வேறு நமது தொழில் முறையில்நம் வாடிக்கைகாரர்களிடம் கிராமத்திலிருந்து நகரம் வரை, இந்தப் பழக்கம் ஒரு பக்கம் மாறினாலும் ஒருபக்கம் இருந்து கொண்டே தான் இருக்கிறது. அன்றாட உணவுப் பொருள்கள், தளவாடப் பொருள்கள், வாழ்க்கைக்கு வேண்டிய அத்தனைப் பொருள்களில் உற்பத்தியிலும் விற்கும் முறையிலும் விலையின் உயர்விலும் மாற்றம் காண்கிறோம். அக விலையில் மாற்றங்கண்டபோது மனிதர் உழைப்பில் மாற்றமும், அதற்குத்தக்க கூலியும் பெறுகிறார்கள். அந்த நிலை இந்த ஒரு தொழிலுக்கு மட்டும் கட்டுப்பாடாகக் கிடையாது.

தொழில்தரம் உயர்த்தப்பட வேண்டும்

நமது தொழிலிலும் மாற்றமில்லை. மின்சார யுகத்திலே இருந்து அணுயுகத்திற்கு மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். நாம் இன்னும் கற்காலத்திலிருந்து கலியுகத்தின் முகப்பில் கூட அடியெடுத்து வைக்கவில்லையென்றால் நமக்குத் தடை விதித்து விட்டதா உலகம்? இல்லை. நமது அறியாமைக்கு முழுச் சுதந்தரமளித்து வேடிக்கை பார்க்கிறது தமிழ்நாடு. மேனாடுகளில் முடிதிருத்தும் தொழிலைப்பற்றியும் கூட ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளனர். அங்குத் தொழிலைப் பற்றிப் போட்டிப் பந்தயங்கள் வைக்கிறார்கள். கைத்திறனைவிட மின் சார சக்தியின் மூலம் வணங்காத முடிகளைப் பந்தாடியும் பற் பல விதமான நெளிவுகளை உண்டாக்கி அழகுக்கு அழகூட்டு கிறார்கள்.

அங்கு, இத்தொழிலகத்தில், எந்த நேரங்களிலும் பதிவு பண்ணிக் கொள்ளாமல் முடி வெட்டிக் கொள்வது கஷ்டம். சமீபத்தில் நமது நிதிஅமைச்சர் இலண்டன் நகரில் இடம் கிடைக்காமல் முகத்தை மட்டும் வழித்துக்கொள்ள 16 ரூபாய் கட்டணம் கொடுத்ததாகப் பத்திரிகையில் பார்த்தோம். நமது நாட்டில் எப்படியிருக்கிறது? கட்டணங்களைக் குறைத்துச் செய்வதில் பல மேதைகள் ஆர்வம் காட்டுகிறார்கள். கூடுதலாக்க மறுக்கிறார்கள். தன்னம்பிக்கை இல்லாத இந்த மின்னல் மன்னர்களுக்காக நாம் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வதா? இந்த நவீன உலகத்தில் கட்டைவண்டி வாழ்க்கையில் கடலைக் கடக்க முடியுமா? ஓரளவு வயிறும் வாயும் நிறைந்துவிட்டால், புழுக்கள் மாதிரி வாழ்ந்து விட்டால் போதுமென்ற எண்ணத்திற்கு இன்னும் ஆதரவு காட்டப் போகிறீர்களா? இன்று ஒவ்வொரு தொழில் நிலையங்களும் வியாபாரம் மந்தப்படும்

நிலையைக் கவனித்தீர்களா? மனிதன் அன்றாட உணவையோ உடைகளையோ, மற்றும் மனிதனுக்கு வேண்டிய தேவைகளை நிறுத்த முடியாது. ஆனால் உலகத்திலேயே ஒரு பொருளை, அதுவும் தமிழ் நாட்டில் தனக்கு வேண்டியபோது ஏற்றும், வேண்டாதபோது நிறுத்தியும் விடலாம். அது தான் முடி திருத்திக் கொள்வது. அவர்கள் விரும்பினால் முடி வெட்டிக் கொள்ளலாம். விரும்பாதபோது வளர்த்துக் கொள்ளலாம். அதனால் அவர்கள் வாழ்க்கையில் எந்த இடைஞ்சலும் குறுக்கிடாது. முகம்வழித்துக் கொள்ளத்தான் பிளேடுகள் இருக்கிறதே! இப்படித் தான் இன்றைய தமிழ்நாட்டுநிலை. பொதுவாக, மற்றத் தேசங்கள் போல நமது நாட்டில் முகத்தையோ முடியையோ அன்றாடம்சீவிச்சிங்காரித்துக்கொள்ளவேண்டும் என்ற நிலை எல்லோருக்கும் ஒருதலையாக இருந்தாலும் நமது நாட்டு மக்கள் சிரத்தை எடுத்து கொள்ள மாட்டார்கள். நன்றாக உடுத்தி இருப்பார்; முகத்திலும் தலையிலும் முடி காடு மண்டிக் கிடப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். நம் நாட்டிலே நம் தொழிலிலே கடவுள் பெயரைச் சொல்லிப் பலநாட்கள், வருடங்களில் முடிவளர்த்துக் கோவிலில் எடுத்துக்கொள்கிறார்கள். நூற்றுக்கு ஐம்பது பேர் நம் பிழைப்பில் குறைவாகிறது.

இடையிலே அமாவாசை, கிருத்திகை, வைகுண்ட ஏகாதசி, சோமவாரம், மார்கழி 30-ம் பீடை நாள், செவ்வாய், வெள்ளி, கிருஷ்ண ஜெயந்தி, விநயகர் சதுர்த்தி, இந்நாட்களில் முடியெடுத்துக் கொள்ளாதவர் 100க்கு 75 பேர் இருக்கிறார்கள். இப்படி வாரத்திலும் மாதத்திலும் வருடத்திலும் நமது தொழிலுக்கு எதிரான நாட்கள் எத்தனை என்பதை எண்ணிப் பாருங்கள். இத்தனையும் சகித்து வருடத்திலே ஒருசில நாட்கள் தொழில் செய்வதிலும், குறைந்த கட்டணம், மேலும் சொந்தமாக வீட்டிலேயே முகம்வழித்துக் கொள்பவர், நூற்றுக்கு 99 பேர் என்பது கணக்குத் தப்பாகாது. இதில் கிராப் செய்து கொள்ள வருபவர் மாதம் ஒன்று, இரண்டு மாதங்களுக்கு ஒன்று, மூன்று மாதங்களுக்கு ஒன்று, அதற்கு மேலும் உண்டு, இடையிலே யாராவது பந்துக்களில் இறந்து விட்டால் அதற்குப் பதினாறுநாள் நம்மிடம் வரமாட்டார்கள். இத்தனை ஆபத்தையும் கடந்து குறைந்த கட்டணத்துக்குத் தொழில் செய்து மனம் நிறைந்துவாழும் நமது மருத்துவர் மக்களாகிய முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு இந்தத் தமிழ் நாடு மிக மிக நன்றியறிதலையுடையதாய் இருக்க வேண்டும் என்றால் அதுவுமில்லை. (தொடரும்)

ஆசிரியர் அவர்களுக்கு

திண்டிவனம் மருத்துவர் சங்கத்தின் வேண்டுகோள்

அன்புடையீர்,

பெருமைக்குரிய கிராமப் பெரியோர்களே, தாய்மார்களே, நமது மருத்துவர் சமூக சகோதர, சகோதரிகளே,

இன்று நாட்டில் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளில் நாங்கள் முன்னேற்றம் வேண்டும் எனக் கேட்டுப் போராடி வரும் இந்நாளில்,

சில கிராமங்களில் நாம் இன்னும் அடிமைகளாகவே அவதிப்பட்டு பல மரியாதைக் குறைவாகவும், மானம் பறி போகும்படியும் அன்றாடப் பேச்சு வழக்கத்தில் தரக் குறைவான வார்த்தைகளைச் சில மேல் ஜாதிக்காரர்களால் நமது இனம் இழிவு படுத்தப்பட்டு வருவது நாம் அறிந்ததே.

அறிந்தும் நமது சமூகத்தினர் கிராமத்திற்கு ஒரு குடியாக இருந்து வாழ்ந்து வருவதால் ஷை மேல் ஜாதிக்காரர்களிடம் நாம் எந்தவிதமான எதிர்ப்போ, நீதியோ, நமது சமூகம் எதிர் பார்த்து வாழமுடியாத நிலையில் உள்ளோம். காரணம் தனித்திருப்பதால்தான் நாம் பயந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

குறிப்பாகத் திண்டிவனம் வட்டம் தீவனூருக்கு அடுத்த விழுக்கம் கிராமத்தில் நம்போன்ற தொழிலாளி ஒருவர் (வேறு தொழில் செய்யக்கூடியவர்) சுமார் 40-வருடங்களாகச் சாவுக்கும், பாலுக்கும், தாலி அறுக்கும் போதும், கரும காரியத்திற்கும் ஊர்சொல்லிக்கொண்டு வந்தவர்: எந்தக் காரணத்தைக் கொண்டோ ஷை தொழில்களைச் செய்வதில் இழிவெனக் கருதி, வேலை செய்ய மறுத்துவிட்டார். நிறுத்தப்பட்ட இழி தொழில்களை ஷை கிராமத்தார் அத்தொழிலை, சவரத் தொழிலாளிகளை ஊர் சொல்லும் வேலையையும், தாலி அறுக்கும்போது மேளம் வாசிக்கும்படியும், மனிதனின் விரும்பாததொழிலைச் செய்யும்படியும் கட்டாயப்படுத்தினார்கள். சவரத்தொழிலாளிகள் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வந்த முறைக்கு மாறாக, செய்யமுடியாது என்று கூறிடவே, ஷை தொழில்களைச் செய்யச் சம்மதம் இல்லாதவர்கள் சவரத் தொழிலையும், பிரசவத் தொழிலையும், மேளத் தொழிலையும்

நீங்கள் எங்களுக்குச் செய்ய வேண்டாம் என்று கிராமத்தார் சவரத் தொழிலாளர்களை நிறுத்தி விட்டார்கள். தற்போது சமூகத்திலே தோன்றிச் சமூகத்தையே காட்டிக் கொடுக்கும் கருங்காலி ஒருவனின் துணைகொண்டு ஷை இழி தொழில் உள்பட இதர தொழில்களும் நடத்தப்பட்டு வருகிறது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எவ்வளவோ நீதி முறைகளைக் கூறிக் கேட்டுக்கொண்டும், கிராமத்தார் நீதியைக் கட்டுப்பாடாக முறியடித்துவிட்டார்கள். ஷை சவரத் தொழிலாளர்கள் வேறு வழியின்றிப் பல தொல்லைகளுக்கிடையே திண்டிவனம் மருத்துவச் சங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டதன் பேரில் சங்கத்தின் சார்பாகத் திண்டிவனத்திலிருந்து விழுக்கம் கிராமத்திற்குச் சென்று கிராம மக்களை ஒருமுறைக்கு இரண்டுமுறை அணுகித் தெளிவான நிலைமைகளை விளக்கி, சமரச முடிவுக்கு வருமாறும், இனி கைவிடப்பட்ட இழிவான காரியங்களில் சமூகத்தினரை வற்புறுத்திச் செய்யச்சொல்லிக் கேவலப்படுத்தாதீர்கள் என்று கேட்டும் கிராமத்தார் கொண்ட கொள்கையைக் கைவிடமறுத்தனர். 'தொடர்ந்து நாங்கள் கூறும் தொழிலைச் செய்யுங்கள்; இல்லையென்றால் வெளியூர் தொழிலாளர்களின் மூலம் எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறோம்' என்று கூறிவிட்டார்கள்.

ஆகவே, மான, மரியாதையைவிட்டு இழிவை உண்டு பண்ணும் தொழிலை நீக்கி, நீதிக்கும், நேர்மைக்கும் பொருந்தாத தொழில்களைச் செய்ய முடியாத நிலையில் இருப்பதால் நல்ல மனம் கொண்ட கிராமப் பெரியோர்களையும், மருத்துவ சமூக நண்பர்களையும் நன்கு பரிசீலித்து அக்கிரமத்தை அப்புறப்படுத்தி, மனிதனை இழிவு படுத்தும் பழக்க வழக்கங்களை ஒதுக்கித் தள்ளி, 'மருத்துவ சமூகத்தினர்களும் மனிதர்களே' என்ற நல்ல முடிவு எடுத்து ஆதரவு தருமாறு அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

த. ம. ம. சங்கம் (கிளை)

திண்டிவனம் மருத்துவர் சங்கம்

11-8-61-ல் விழுக்கம் திரு நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கிராமக் கிளைச் சங்க அமைப்புக் கூட்டத்தில் அடியிற் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

பல கிராமங்களிலிருந்தும் நம் சமூகத் தோழர்கள் வந்திருந்தனர். செயலாளர் வே. ஆறுமுகம். E. சபாபதி. அ. கண்ணன் முதலியோர் சமூக முன்னேற்றம் பற்றிப் பேசினர்.

பிரதி அமாவாசையன்று கிராமங்கள் தோறும் கூட்டங்களை நடத்துவதென்றும், மாதா மாதம் சந்தா வசூலிப்பதென்றும், மருத்துவ ஏழைக் குழந்தைகளுக்குப் படிப்பதற்கு வேண்டிய வசதிகளைத் தேடித் தருவதென்றும், ஏழை மருத்துவ மக்களுக்குத் திருமணம் நடத்திவைப்பதென்றும், விழுக்கம் கிராமத்தினர் கையாளும் பிற்போக்கான தொழில்களை இனி தொடர்ந்து செய்வதில்லை யென்றும், பழக்கமில்லாத சாவுக்கு ஊர் சொல்வது, தாலி அறுப்பதற்கு மேளம் வாசிப்பது, இவைகளை அடியோடு நிறுத்துவதோடு நாம் கோரும் நிபந்தனையை ஏற்றுக் கொள்ளும்வரை விழுக்கம் கிராமத்தில் முடி திருத்தும் தொழிலையும், மேளம் வாசிப்பதையும் மருத்துவம் செய்வதையும் நிறுத்திவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டு, செயலாளர் சங்கரன் நன்றிகூறக் கூட்டம் முடிந்தது.

அடியிற் கண்டவர்கள் நிர்வாகிகளாக நியமனம் செய்யப்பட்டனர்: தலைவர் திரு. நடேசன், செயலாளர் திரு. சங்கரன், பொருட்காப்பாளர் திரு. பரசுராமன், சிவலிங்கம், தாண்டவராயன், ராமசாமி, சுப்பிரமணியம், வேதாசலம், சுப்பராயன், கண்ணன், கோவிந்தசாமி. இவர்கள் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

பாரதியின் தனி இலக்கிய மாண்பு

சு. ந. சொக்கலிங்கம், M. A.

தமிழ் தொன்மையும் சிறப்பும் உடைய மொழி. உலகிலுள்ள உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாய் இலங்கி வருகின்றது. இலக்கண வரம்புடைய இனிய மொழி; இலக்கிய வளம் பெற்ற தொன்மொழி. இத் தொன்மொழிக்கு அணி செய்த பெருங்கவிஞர்களுள் ஒருவர் நம் பாரதி ஆவர். இவருடைய கவிதைக் கருவூலத்தின் இலக்கிய மாண்பை நோக்குவோம்.

"இவரது உடல் அடக்கம் செய்ய இவர் வீட்டில் பொருளில்லை. நண்பர்களின் பொருளுதவி கொண்டு அந்த இறுதிக் கடன் நிறைவேறியது." என்றவரிகளைக் கலைக்களஞ்சியத்தில் 'பாரதியார்' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருப்பதைப் படிக்க உண்மையிலேயே தமிழர் மனம் கொதிக்கும். இக் கவிஞர் இறந்த நிலையை உள்ளவாறு எழுதியிருக்கிறார்கள். இவர் வாழும்போது இவர் உள்ளத்தில் ஊற்றெடுத்த கருத்து வெள்ளத்தில் மூழ்கி அமைதி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை.

மொழியின் வாயிலாக வாழ்க்கை முறையை எடுத்துக் காட்டுவது இலக்கியம் என்று 'ஹட்சன்' கூறியுள்ளார். பாப்பாப் பாட்டில்,

'உயிர் களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் ; இது
வாழும் முறைமையடி பாப்பா.

என்று பாடியிருக்கிறார். மக்களிடமுள்ள பழக்கம் வழக்கமாக மாறி, வழக்கம் பண்பாடாக மாறி, பண்பாடு நாகரிகமாக மலர்ச்சியுறுகிறது என்கிறார்கள். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது பழமொழி. இளம் பருவத்தில் வேண்டத்தக்க பண்புகள் அமைய வேண்டும் என்பதை யுணர்ந்து, வாழ்க்கை முறையைக் காட்டுகிறார் கவிஞர் பிறிதோரிடத்தில்:

'ஒற்றுமையால் மேன்மையுண்டாம்
ஒன்றை யொன்று துன்பிழைத்தல்
குற்றமென்று கண்டால் குறைவுண்டோ
வாழ்வினுக்கே '?

என்று 'ஒற்றுமை' வாழ்வுக்கு இன்றியமையாத பண்பு என்பதைத் தெளிவுறுத்துகிறார். நம் கையிலிருக்கும் ஐந்து விரல்களும் ஒன்றித் தொழிற் பட்டால்தான் எப் பொருளையும் எடுக்கவோ, பிடிக்கவோ இயலும் என்பது நாம் அறிந்ததே. ஐந்து விரல்களும் தனித்து நின்றால் பயன் விளையாது. வாழ்க்கை முறையை இவ்வளவு நல்ல முறையில் எடுத்துக் காட்டுவதை நாம் உணர்கிறோம்.

தான் நேராகக் கண்ட பொருளின் பண்பினை உள்ளது உள்ளவாறே கூற வேண்டும் என்றார் கூர்த்த மதியுடைய 'எமர்ஸன்'. உள்ளதை உள்ளவாறு கூறுவதற்கு ஒரு கவிஞன் வேண்டுமா? யாருமே இருப்பதைப் பார்த்துக்

கொள்ளக் கூடாதா? என்றெல்லாம் சிலர் கேட்பதுண்டு. உப்பில்லாத பண்டத்தை உண்ண முடியாது. உப்பு அதிகம் இருந்தாலும் உண்ண இயலாது. அளவாக உப்பு கலந்திருக்கும் உணவே நாவிற்குப் பொருந்துவதாக அமைவது போலவே, கற்பனை அளவாகக் கலக்கப்பட்டிருப்பின் படிப்பதற்குச் சுவையாக அமைவதுடன் பயனையும் தருகிறது. காலைக் கதிரவன் அழகைக் கற்பனை கலந்து,

> " தங்க முருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி
> எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ "?

என்று குயில்பாட்டில் யாத்துள்ள வரிகளைக் கண்டு மனம் பூரிக்கிறோம். அன்றியும்,

> ' புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
> மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சிதந்து
> விண்ணை வெளியாக்கி, விந்தைசெய்யும் சோதியினைக்
> காலைப் பொழுதினிலே கண்விழித்து நான் தொழுதேன் '

என்றவரிகளைப் படித்து உள்ளவாறு கூறும் திறத்தை அறிகிறோம். மேலும், பாரதி தாம் கற்ற கல்வியைப் பற்றி உள்ளவாறு எடுத்துரைக்கிறார். அக் கல்வி பேடிக் கல்வி, அதை விரும்பிப் பித்தர்கள் படிக்கிறார்கள் என்றெல்லாம் எண்ணி மனம் புண்ணாகிறார். அக் கல்வியால் தமக்கு எப் பலனும் வாய்க்கவில்லை யென்றும், பல்லாயிரம் தீது சேர்ந்தன என்றும், இதனை நாற்பதாயிரம் கோயிலிலும் அறுதியிட்டு உறுதியாகக் கூறத் தயார் என்றும் உரைக்கின்றார். இதோ கவிதை :

> ' செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது;
> தீதெனக்கப் பல்லாயிரஞ் சேர்ந்தன ;
> நலமோ எட்டுணையுங் கண்டிலேனிதை
> நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்
> "

இப்படி அக்காலக் கல்வியைப் படம் பிடித்துக் காட்டுகிறதை அறிகிறோம்.

மக்களுக்கு நல்லொழுக்கம் புகட்டுவதில் ஒரு சிறந்த கருவியாக விளங்குகிறது இலக்கியம் என்றார் நல்லறிஞர் 'மோர்லே'. கோபத்தை ஒழிக்க வேண்டுமென்று பாரதி குறிப்பிட்டுள்ளார். 'கோபம் குடியைக் கெடுக்கும்' என்பது யாவரும் அறிந்த வாசகம். வெற்றி அடைய விரும்புகின்றவன் கோபம் கொள்ளவே கூடாது என்ற கருத்தமைய,

'வெல்வான் வெகுளிவிடல்' என்கிறது நாலடியார். சினம் என்பது நெருப்பு என்றும், அது இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். நீண்ட நாள் வாழ வேண்டுமானால், கோபம் கொள்ளக்கூடாது என்பது பாரதியின் கருத்து.

" கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி யுண்டாம்
கொடுங்கோபம் பேரதிர்ச்சி "

என்ற வரிகளில் கோபத்தினால் நாடி நரம்புகளில் அதிர்ச்சி உண்டாகின்றது என்ற நுண்கருத்தை விளக்குகிறார். கோபம் ஏற்படும்போது முகம் சிவப்பதையும், கண் எரிகாலுவதையும், உடல் வியர்ப்பதையும், மீசை துடிப்பதையும் கண்டிருக்கிறோம். சிலர் கோபம் வந்தால் " நான் மனுஷன் இல்லை " என்று சொல்வதைக் கேட்டுள்ளோம். இதிலிருந்தே மனிதனுக்குரிய தலையாய பண்புகளைக் கோபம் கொல்லும் என்பது போதருகிறது. கோபத்தை அக்கினிக் குஞ்சு என்கிறார் பாரதி.

" கோபத்தை வென்றிடலே பிறவற்றைத்தான்
கொல்வதற்கு வழியென நான் குறித்திட்டேனே "

என்று நமக்குச் சிறந்த அறிவுரை கூறுகிறார். இப்பொன்னான அறிவுரையை வாழ்வில் கடைப்பிடித்தால் எவ்வளவோ நன்மைகளை நாம் அடையலாம்.

இலக்கியத்தைக் 'காலக் கண்ணாடி' என்று கூறுவர். இவ்வுண்மையை அடிப்படையாக வைத்துப் பாரதியின் பெருநூலைப் படிக்கும்போது அவர் வாழ்ந்த காலத்தைச் செவ்வையாக உணரலாம். நாடு அடிமையில் அவதியுற்ற காலம்; மக்கள் தாய் மொழியின் சிறப்பை மறந்த காலம்; 'வெள்ளையனுக்கு அடிமை செய்வதே வாழ்வின் குறிக்கோள்' என்று சிலர் எண்ணிய காலம். வெள்ளையனாய்ப் பிறக்காமல் இந்தியனாய்ப் பிறந்துவிட்டோமே என்று சிலர் தம் பிறப்பைக் குறித்தே எரிச்சல் கொண்ட காலம். இந்தியனாய்ப் பிறந்தாலும் வெள்ளையரின் நடையுடை பாவனைகளை விரும்பிச் சிலர் கோலம் பூண்ட காலம். மக்கள் அஞ்சிப் பதுங்கி, 'வெந்ததை உண்டு விதி வந்தால் சாவோம்' என்று நினைத்த காலம். இவர்களைப் பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு, ஊமையராகவும், செவிடராகவும் குருடராகவும் இருக்கிறார்கள் என்கிறார்.

நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே.

என்று இவர்களை நினைத்து மனம் பொங்கி,

கொஞ்சமோ பிரிவினைகள்?—ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ?

என்று பிரிவினைகளைக் கிளந்து,

கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்.

என்று மக்களின் அறியாமையை விளக்கி,

எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள் போல்—பிறர்
காட்டிய வழியிற் சென்று மாட்டிக்கொள்வார்.

என்று வயிற்றெரிச்சலோடு முடிக்கிறார்.

மக்கள் வயிறு வளர்ப்பதையே பெரிதென மதித்தார்கள். வயிற்றிற்குச் சோறு தேடுவதே பெரும் இலட்சியம் எனக் கருதினர். மறைவாகப் பழங் கதைகளையும் மற்றவர்களைப் பற்றிய சின்னஞ் சிறு கதைகளையும் சளசள வென்று பேசி மகிழ்ந்தனர்.

"தேடிச் சோறு நிதந் தின்று—பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்ப மிக உழன்று—பிறர்
வாடப் பல செயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப் பருவ மெய்தி—

என்று மக்களின் வாழ்வு நிலையைச் சொல்லோவியமாகத் தீட்டிக்காட்டுகிறார்.

சிறந்த கவிஞர்கள் வருங்கால நிகழ்ச்சிகளைத் தாம் வாழுங் காலத்திலேயே குறிப்பிடுவார்கள். நாம் சுதந்திரம் அடைவது உறுதி என்பதை வாலிதின் உணர்ந்து,

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று (ஆடுவோமே)

என்று சுதந்திரப் பள்ளைப் பாடி இருக்கிறார்.

காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்.

என்று கூறியுள்ளார். இன்று உலகின் எம்மூலையில் பேசி யதைக் கேட்பதற்கும் விஞ்ஞானிகள் கருவிகளைக் கண்டு பிடித்திருப்பதை அறியும் போது இவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

'சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்று நமக்குச் சொல்லியுள்ளார். அதை நாம் செவிமடுக்காவிடி னும், சோவியத் யூனியனும் அமெரிக்காவும் சந்திர மண்டலத் தைச் சென்றடைவதற்கு இடையறாத முயற்சிகளை அயராது ஆற்றுவதையும், சந்திரனின் மறுபக்கத்தைச் சோவியத்து விஞ்ஞானிகள் நிழற்படம் எடுத்ததையும், அங் குள்ள பல இடங்களுக்கு விஞ்ஞானிகளின் பெயர்களைச் சூட்டியுள்ளதையும் அறிவோம். சந்திர மண்டலத்திற்கு மனிதன் செல்வது ஏறத்தாழ உறுதியாகி விடும் என்று நினைக்கிறோம். தவிர, செவ்வாய் மண்டலத்தின் இயலைச் சோவியத்து விஞ்ஞானி உணர்ந்து, அங்கு மக்கள் வாழ வழி யில்லை என்றும், நுண்ணுயிர்களே வாழ்கின்றன என்றும் அண்மையில் சொல்லியதைக் கேட்டுள்ளோம். இவற்றை அறியும்போது பாரதியின் வருங்காலம் உணரும் ஆற்றலை வியவாமல் இருக்க முடியுமா?

பாரதியின் பாட்டில் கருத்து புதிது, சுவை புதிது, உணர்வு புதிது என்று பாரதியின் கவிதை இன்பத்தைத் துய்த்தோர் மொழிகின்றனர். இவற்றில் கருத்துப் புது மையை முதற்கண் நோக்குவோம். இதழ்களைப்பற்றிக் குறிக் கும்போது "அமுத ஊற்றினை ஒத்த இதழ்கள்" என்கிறார். கண்களைப்பற்றிச் சொல்லும்போது 'நிலவு ஊறித் ததும்பும் விழிகள்' எனப் பாடுகிறார். 'பொன் போல் குரலும் புது மின் போல் வார்த்தைகளும்' என்று அழகுற நவில்கிறார். திரு மாலைக் 'காயாம்பூ வண்ணன்' என்றும், 'கடல் வண்ணன்' என்றும், 'கார்வண்ணன்' என்றும், பல செந்நாப் புலவர்கள் சிறப்புறப் பாடியுள்ளனர். ஆனால், காக்கையின் நிறம் உடை யவன் என்று யாரும் சொன்னதில்லை யல்லவா?

காக்கைச் சிறகினிலே—நந்தலாலா
உன்றன் கரியநிறம் தோன்றுதடா—நந்தலாலா.

என்ற வரிகளைப் படிக்கும்போது பாரதியின் கருத்துப் புதுமை வெளிப்படுகிறது. காக்கைச் சிறகினிலே திருமாலின் நிறத் தைக் கண்டு அதை முதலில் கூறியபுலவர் நம் பாரதியார் தான்.

புதிய சுவையைச் சிறிது காண்போம். ஒன்பான் சுவைகளையும் நம் தீந்தமிழ்ப்புலவர்கள் தெற்றென விளக்கியுள்ளனர். சோற்றுக்குப் பஞ்சம் வந்ததை எண்ணியதும் பாரதிக்கு ஆத்திரம் வருகிறது. காவிரி, தென் பெண்ணை, பாலாறு, தமிழ் கண்டதோர் வையை, பொருனை ஆகிய நதிகள் பாயும் நாட்டிலா பஞ்சம்? என்று எண்ணி மனம் குமுறுகிறார். அவர் மனம் கொதிக்கிறது. வெறுஞ்சோறு கூடவா கிடைக்கவில்லை? என்று எண்ணியதும்,

சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்
வெறுஞ் சோற்றுக்கோ வந்ததிப் பஞ்சம்'.

என்று பஞ்சத்தை நினைத்து மனங் கொதித்துப் பாடுகிறார். தேனை மறந்திருக்கும் வண்டும், ஒளிச் சிறப்பை மறந்து விட்ட பூவும், வையம் முழுதும் இல்லை என்று புதிய சுவை படமொழிகின்றார்.

உணர்வு புதிது என்பதை இறுதியாகக் காண்போம்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே.

என்று செந்தமிழ் நாட்டை நினைத்துப் பூரிக்கின்றார்.

"தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர்
சிறப்புக் கண்டார்"

என்று தமிழன் தனி மாண்பைப் பகர்கிறார்.

'உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவொன்றில்லை, ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்' என்ற கொள்கையுடைய கவிஞர்,

"காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்".

என்று பாடிய வரிகளில் காக்கைகளையும், குருவிகளையும், கடல்களையும், மலைகளையும் ஒரே கூட்டமாகக் காணும் பெருஞ் சமநோக்கு நம்மைப் புது உணர்வில் மூழ்க வைக்கிறது.

"சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்.

என்ற வரிகளைப் படிக்கும்போது, புத்துணர்வு பிறக்கிறது.

நாடு, மொழி, தேசிய இயக்கம், சுதந்திரம், சமயம், நீதி, சமூகம், ஞானம் ஆகியன குறித்தும் பாடியிருப்பதுடன்

தனிக்கவிதைகளையும், சான்றோர்களைப் பற்றியும் பாக்கள் பல இயற்றியுள்ளார். குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்க பெருங் காப்பியங்களாகும். அவற்றுள் குயில்பாட்டு, அழியாப் புகழுடையது. இதைக் 'கதை பொதிந்த கவிதை' என்றும் 'கற்பனைக் காவியம்' என்றும் மொழிகின்றனர். கண்ணன் பாட்டில் கண்ணனைத் தோழனுகவும், தாயாகவும், தந்தையாகவும், சேவகனுகவும், அரசனுகவும், சீடனுகவும், சற்குருவாகவும், குழந்தையாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும், காதலனுகவும், காதலியாகவும், ஆண்டாளாகவும் வைத்துப் பாடியுள்ளார். ஆழ்வார்களின் பாக்களைப் படித்த பின்னரும் இவை இனிக்கின்றன என்பதை இலக்கிய நயமுணர்ந்தோர் செப்புகின்றனர். கண்ணனைத் தலைவியாகக் கொண்டது தனி மாண்பாகும்.

வியாசரும், வில்லிபுத்தூராரும், நல்லாப்பிள்ளையும் பாடிய பின்னருங்கூடப் பாஞ்சாலி சபதம் படிக்கப் புளிக்கவில்லை. ஆயிரங்களான நீதிகளை உணர்ந்த தருமன், தேயம் வைத்துச் சூதாடி இழந்ததைக் குறிப்பிடும்போது 'சீச்சி சிறியர் செய்கை செய்தான்' என்று நெஞ்சுரத்தோடு துணிந்து உரைக்கின்றார். எல்லோரும் தருமனைப் புகழ்ந்து பேசி இருப்பினும், யார் தவறு செய்தாலும் தவறு தான் என்பதை வலியுறுத்தும் திறம் பாரதியின் தனி மாண்பைக் காட்டுகிறது.

நாட்டுப் படலத்தையும் நகரப் படலத்தையும் பலர் பாடியுள்ளனர். ஆனல் பாரதிதான் நாட்டு விடுதலையைப் பற்றி முதன் முதலாகப் பாடியுள்ளார். நாட்டின் பெருமையைக் கூறி நாட்டுக்கும், தாயின் மணிக் கொடிக்கும் வணக்கம் கூறுகிறார்.

பழமையில் நல்லவற்றுள் பிடிப்புடன் புதுமையை விரும்பிய புலவர் பாரதி. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கூறிய பூங்குன்றன் வழிவந்த தமிழ்ப்புலவர் பாரதி. உலக மக்களிடம் அன்பு கொண்டிருந்த காரணத்தால், எங்கெல்லாம் மக்கள் துன்புற்றதை அறிந்தாலும் அவர் மனம் பதைத்தது; துடி துடித்தது. வெளி உலகில் நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சிகளை உள்ளவாறு உணர்ச்சித் துடிப்புடன் பாடியுள்ளார். இத்தகைய சிறந்த புலவன் இயற்றியுள்ள கவிதைகளைச் சுவைத்தல் நம் கடமை.

அழகிற்கு அடிப்படை முடிதிருத்தும்கலை

(M. A. R.)

கல்தோன்றி மண்தோன்றாக்காலம் ஒன்று இருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. நமது கற்பனையிலும் அப்படி ஒரு காலம் இருந்திருக்கத்தான் வேண்டும் என்றே ஊகிக்க வேண்டி இருக்கிறது. உருண்டைபோன்ற உலகத்திலே, அணுபோன்ற மணலும், அதிலிருந்து படிப்படியாகக் குன்றுகளும், கற்களும் இயற்கையாகவே ஏற்படுவதற்கு எதுகாரணமாக இருந்திருக்கலாம் என்பதைத் தெளிவாகப் புலப்படுத்த முடியுமா? என்பது கடினமாயினும், மழை, காற்று, ஒலி, ஒன்று சேர்ந்து தாக்கியதன்விளைவே பிளவும், மோதலும், ஒரசலும், மண்ணும், கல்லும் ஏற்படக்காரணமாய் இருந்ததாகக்கூறும் ஆய்வாளர்களான விஞ்ஞானிகள் கருத்தை மறுக்கமுடியாது. மறுத்துக்கூறுவதற்குப் பிறிதோர் காரணம் நமக்குப் புலப்படவில்லை. வளரும் விஞ்ஞான உலகம் மீண்டும் அறிந்து கூறும்போது நாம் அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டித்தான்வரும். படிப்படியாகத் தாவரங்கள், உயிரினங்கள் வளர்ச்சியடைந்து மனிதஇனம் தோன்றியதிலிருந்தும், தன்உணர்வு ஏற்பட்டதிலிருந்தும் படிப்படியாகப் பல கலைகளை ஏற்படுத்திக்கொண்ட மனிதவர்க்கம், உணவு, உடை மிக அவசியமான பொருளாகக் கருதிவந்தது காலம்வளரும்போது ஒருவரை ஒருவர் (அரையில்) ஆடை அணிந்ததைத் திருப்தியுடன் பார்த்துப் பரவசம் அடைந்தகாலம். அடுத்தது என்ன? என்ற உணர்ச்சியால் ஏற்பட்ட செயல்முறைதான் நாகரிகம் என்ற காலம் ஆரம்பமாகி இருக்கவேண்டும். அன்று அரையில் ஆடையும், உடல்முழுதும் முடியும், அடர்ந்த தாடிமீசையுடன் காட்சியளித்த மனிதன் உண்பதற்கும் உறங்குவதற்கும் இடர்தந்த முடிகளில் கவனம் திரும்பியபோது அதை நீக்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டிருக்கவேண்டும். அந்த முதல் கைங்கரியத்தைச் செய்தவர்கள், கல்லை ஆயுதமாகக்கொண்டு தாடியை அகற்றினர்கள் என்பதைச் சரித்திரத்தில் படிக்கிறோம். அதன்பின் கண்ணாடி ஓடுகள் உபயோகப்படுத்தப் பட்டதாகப்படிக்கிறோம். முடிகளைந்த முகத்தைக் கண்ணுற்ற மனித இனம்களை சொட்டும் முகத்தைக் கண்டான். சொல்ல

வேண்டுமா ? படிப்படியாகத் தலையும் முகமும், அலங்காரம் செய்யவேண்டிய கைத்திறனும் ஆரம்பமாயின. மனித இனம், தீவு தீவாகமாறியபோது ஒன்றை ஒன்று பார்த்து அலங்காரங்களும் மாறின. முடியை வளர்த்துச் சடைபோட்டுக் கொண்ட நாட்டினரும் கழுத்தளவில் முடியை நறுக்கி, முகத்தில் முடியை எடுத்துகொண்டவரும், முகத்தில் முடியைவிட்டுத் தலை முடியை எடுத்தவருமாக இருந்த காலம் ஒன்று. அந்தக் காலத்தில்தான் தமிழ்நாட்டில் சைவமும் சமணமும் பழக்க வழக்கத்தில் மாறுபட்ட கருத்தைக்கொண்டு, மதம் அரசியலிலும் போட்டியிட்ட காலத்தில் மொட்டையடிப்பதா ? முடி வளர்ப்பதா ? என்ற பிரச்சனை வலுத்தது. அதன் முடிவு, மறத்தமிழன் வள்ளுவர் வாய்மொழியில் தீர்ந்திருக்கலாமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது.

காரணம், முடி அலங்காரவகையில் நீண்டசடையும், தாடியும், மொட்டையும், பெரும்பாலும் நீங்கி நிரந்தரமாக வழக்கத்தில் வந்துள்ள, (கிராப்) நீளமின்றியும் மழுங்க வழிக்காமலும் நடுத்தரமான அளவில் முடியை அழகுபடுத்தும் அளவில் வந்ததற்கு வள்ளுவர் சொன்ன “மழித்தலும் நீட்டலும் வேண்டா(ம்) உலகம், பழித்தது ஒழித்துவிடின்” என்பதைச் சிந்தித்தால் முதல் முதல் தமிழ்நாட்டில் தோன்றியதே என எண்ணுவது தவறாகாது என நினைக்கிறேன்.

உலகமக்களிடையே பெரும்பாலும் நிரந்தரமாகத் தங்கி விட்ட (கிராப்), முடிதிருத்தும் பழக்கம் ஆரம்பக் கட்டத்திலிருந்ததைவிட நாகரிகமடைந்திருக்கிறது. முதலில் கத்தரி கொண்டு நறுக்கப்பட்டு வந்தது. உலகில் நமது நடைமுறைப் பழக்கத்திற்கு நூறுவருடங்களுக்கு முன்னால் போய்க்கொண்டிருக்கும் மேனாட்டினருக்கும் நமக்கும் கருவிகளில்தான் தாரதம்மியமுண்டு. கருவிகள் கண்டுபிடிப்பதில் முன்னேறி இருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கமுடியாது. நாம் ஒரு காலத்திலே, கையால் நூற்று, மோதிரத்திற்குள் நுழைக்கப்பட்ட சால்வையை மேனாட்டார் பார்த்துத் திகைத்தது ஒருகாலம். இப்போது அவர்கள் மிஷின்களினால் அதைச் செய்து முடிக்கிறார்கள். அப்படித்தான் கைத்தொழில் வளர்ச்சியில் விஞ்ஞானக் கருவிகளின்மூலம் முன்னேறி இருக்கிறார்கள். அதில் சந்தேகமில்லை. ஆனால் கையினால் செய்யும் தொழில்களில் இந்தியர்களை மிஞ்சிவிடவில்லை என்பதை யாவரும் ஒப்புகொள்வார்கள் என நம்புகிறேன்.

அதிலும் தமிழ் நாட்டில் கைத்தொழில் மிகச்சிறந்த அழகைத் தரும் விதத்தில் செய்யப்படுகிறது. இந்தியாவிலேயே தமிழனின் அறிவுக்கு மதிப்புத் தரும் உலகம், அவன் கைத் திறமைக்கு இழுக்குச் சொல்ல முடியுமா? தமிழ்நாட்டின் நெசவுத்துணிகளையே அமெரிக்கா விரும்புகிறது என்ற ஒரு உதாரணம் போதுமல்லவா? அதைப்போன்றே முடி திருத்தும் தொழிலில் விதவிதமான கருவிகளைக் கொண்டு நவீன முறையில் தொழிலை மேனுட்டார் நடத்தினலும் தொழிலின் தன்மை ஒன்றுதான். பிறர் கண்களுக்குக் கவர்ச்சி கரமாக அளவுப்படி செய்து முடிக்கவேண்டும். எந்தப்பானை யில் வேகவைத்தாலும், உணவு சரியாக வேகவேண்டும். பொன்பானையில் வெந்தது என்பதற்காக வேவாவரியான உணவை உண்ணமுடியுமா? உடலுக்குத்தான் ஒத்துக்கொள் ளுமா? மின்சாரக் கருவிகளால் செய்பவர்கள், மேலும் தேவர் கள் (வெள்ளையர்கள்) என்பதனல் தொழில் முறைப்படி அமைந்துவிட்டதாக எடுத்துக்கொள்ள முடியுமா என்ன? 'செய் வன திருந்தச்செய்' என்பது தமிழ்ப் பழமொழி. அதன்படி கை யாள்வது தமிழர் இயல்பு. இவ்வகையில் மனமும் அவயவமும் ஒன்றுபட்டு, மிகக் கவனமாகச் செய்யும் தொழிலில் இதுவும் ஒன்று. மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதன்தான் இத்தொழிலைச் செய்யமுடியும். அதிலும் கவனக்குறைவால் குறிப்பிட்ட நீளத்தைக் குறைத்து விட்டாலோ, தலையின் உச்சி வரையிலும் உயர்த்திவிட்டாலும், மீண்டும் அதைக் கீழ்ப்புறம் இறக்கவோ, குறைந்த முடியை நீட்டவோ முடியாது. வேண் டாத இடத்தில் எடுத்துவிட்டால் மீண்டும் அதைப்பொருத்தி வைக்கமுடியாது. நீட்டிய பொன்னையோ இரும்பையோ குறைக்கலாம், குறைந்த அளவை நீட்டலாம். அப்படியல்ல முடிதிருத்தும்கலை. இந்தக்கலை நினைத்தவர்கள் நினைத்த படிச் செய்யகூடியதல்ல. பல ஆண்டுகள் பழக்கத்தில் கவனமாகக் கருத்தைச் செலுத்தினலன்றிச் சிலமணி நேரத்தில் பழகக்கூடியதல்ல என்பதை நாம் நினைவிலிறுத்த வேண்டும். இக்கலையைப் பொறுமையோடும் மனநிறைவோடும் கவனம் செலுத்திச் செய்பவர்களே பிறர்மனதைக் கவரும் வண்ணம் தொழில் செய்யமுடியும். பஞ்சத்திற்கு ஆண்டியா? பரம்பரை ஆண்டியா? என்பது போல வயிற்றுப் பிழைப்பிற் காகப் போகிறபோக்கிலே மற்றவேலைகளைச் செய்வதுபோல இதையும் செய்யமுடியாது. தமிழ்நாட்டில் இக்கலையின் சிறப்- பை மக்கள் பொருட்படுத்துவதில்லை. இக்கலையை ஒரே வகுப் பினர்தான் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கலையை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்களே இதை வாழையடி வாழையாகச் செய்துவருகிறார்கள். நாட்டில் எத்தனையோ மாறுதல் ஏற்பட்டது. மன்னர் மன்னர்கள் முடி இழந்தார்கள். மேடுபள்ளமாயிற்று.பள்ளம் மேடாயிற்று. காடு நாடாயிற்று. நாடு காடாயிற்று. காலவெள்ளம் மக்கள் வாழ்க்கையிலே பல புதியதிருப்பங்களை ஏற்படுத்திற்று. உழுது பிழைத்தவன் உலகையாளும் படைவீரனானான். பஞ்சாங்கம் படித்தவன் படைத்தலைவனானான். ஊரை மேய்ந்தவன் உல்லாசபுரிக்கு அதிபனானான். அரசன் ஆண்டியானான். ஆண்டி அரசனான். இப்படியெல்லாம் பல புரட்சிகரமான மாறுதலைக் கண்ட தமிழகம், முடிதிருத்தும் கலைக்குரிய இம்மருத்துவ வகுப்பினர்மட்டும் இவ்வருங்கலைச் சிறப்பை உணர்ந்தோ உணராமலோ, இவர்கள்மட்டும் நெடியோன் சேரலாதன் ஆட்சியிலிருந்து காமராஜர் ஆட்சிவரை தம் கலைத்தொழிலிருந்து மாறவில்லை என்பதை நிதானிக்கும்பொழுது இந்த நிலையில் என்ன சக்தி இருக்கிறது? என்பதைச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. அதே நிலையில் தமிழ்நாட்டு மக்கள் இக்கலைஞர்களை ஒதுக்கியே வாழ்ந்தும்கூட கலைப்பற்றைக் கைவிடாமல் இருப்பதின் மர்மம் என்ன என்பது சிந்தனைக்குரியதுதானே? (தொடரும்)

மருத்துவர் மன்றம்—மாத இதழ்

வெளியீட்டு விழா

15-8-61 சென்னைப் பிடாரியார் கோயில் தெரு சகாய மாதா மணிமண்டபத்தில் திரு. N. சண்முகனார் தலைமையில், மருத்துவர் மன்ற வெளியீட்டு விழா, மருத்துவர் மன்ற நிர்வாகக் குழுவினரால் நடைபெற்றது. தமிழ்ப் பேராசிரியர் திரு. S. N. சொக்கலிங்கம் M. A. அவர்கள் வெளியீட்டைத் துவக்கிவைத்துப் பேசியதாவது: "மருத்துவர் மன்றம் மாத இதழ் மிகச் சிறந்த முறையில் இருப்பதற்கு மகிழ்ச்சி. நாட்டில் பல வகையில் பத்திரிகைகள் தோன்றி இருப்பதுபோல் மருத்துவக் கலையை மக்கள் புரிந்து உடல்

வளத்துடன் வாழச் சேவை செய்ய முன்வந்துள்ளதை மக்கள் ஆதரிப்பதோடு பரம்பரையாக சித்தவைத்தியத் தொழில் புரியும் இச் சமூகம் ஒன்றுபட்டு, இதுபோன்று பல நல்ல செயல்களைப் புரிந்து நாட்டிற்கு ஒரு நல்ல சமூக மாகக் காட்சியளிப்பார்கள் என நம்புகிறேன்" என்று விரிவாகப் பல அரிய கருத்துக்களைப் பேசினர்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை M. A. L. T. அவர்கள், "தமிழன் தன் இனப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்க்கவேண்டும் என்றும், ஒரு சமூகம் தனது சமூகம் சீர்திருந்தும் வகையில் உழைப்பதுதான் முதல் கடமை யென்றும், அது நிறைவேருமலே பல கட்சிப் பிரச்சனைகளில் தலையிட்டுப் பயனில்லை என்றும், மருத்துவர்கள் இன்னும் ஒன்றுபட்டு வாழ முயலவில்லை என்றும், சேர்ந்து வாழ முயற்சிக்கும் அன்பர்களுக்காவது ஆதரவளித்து, அதற் கென வெளிவரும் மருத்துவர் மன்றத்தை ஆதரித்து, நாட் டுக்கும் மக்களுக்கும் அருந்தொண்டு செய்ய வேண்டும்" எனக் கூறினர். மற்றும், R. சடகோபன் அவர்கள் பிளவுமனப் பான்மையை விடுத்து, நாட்டுக்கொரு நல்ல சமூகமாக வளர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். R. M. நடேசனர் அவர்கள், பத்திரிகையை மருத்துவர்களும் பொது மக்களும் ஆதரிக்க வேண்டிய சூழ்நிலையை இடைவிடா முயற்சியுடன் உண்டாக்க வேண்டுமெனக் கூறினர். மற்றும் A. கதிர் வேலன், P. ஜம்புலிங்கம், M. M. S., அகமது, P. பலராமன், மீ. கணபதி முதலியோர் பேசினர்கள். வாழ்த்து மடல்கள், தந்திகள் யாவும் வாசிக்கப்பட்டது.

தலைவர் N. சண்முகனர் அவர்கள் கூறியதாவது: மருத் துவர் மன்றம் பல நாள் எண்ணித் துணிந்தபின் உழைப் பின் உருவாய் வந்ததென்றும், மருத்துவர் சமூகத்தின் உண்மை உழைப்பையும் வாழ்க்கை நிலையையும் தெள்ளத் தெளிய எடுத்துக் கூறி, மருத்துவக்கலை, தொழிற்கலை, இசைக்கலை இவைகளை வளர்த்து, மனித சமூகத்தில் சமத்துவம், சகோதரத்துவம் பெருகுவதே மருத்துவர் மன்றத் தின் லட்சியம் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மேலும் இப் பொதுத்தொண்டை யாரைக்கேட்டும் துவங்க வேண்டும் என்ற அவசியமில்லை. சமூகம் பல கோணங் களில் செல்வதைத் தடுத்து, ஒரே லட்சியப் பாதையில் செல்ல வேண்டும் என்பதே இம்மன்ற நிர்வாகிகள் முடிவு என்

பதை அறிகிறேன். ஆனாலும் ஒத்துழைப்பைத் தராவிடினும் எதிர்ப்புகளை வளர்க்கும் பல மனிதர்கள் உண்டு. இது நமது நாட்டில் தொன்றுதொட்டு இருந்துவரும் சாபக்கேடு. அதையும் சமாளித்துக் காரியத்தில் வெற்றிபெறுவதுதான் தமிழர்களின் சிறந்த சாதனையாகும்.

மேலும் பத்திரிகையில், சிறுவர் பகுதியும் சேர்த்து, ஆரம்பத்திலேயே சுகாதாரமாக வாழச் சிறுவர்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் ஒரு பகுதியை ஆரம்பிக்க வேண்டும் என்று கூறி, பல நல்ல அறிஞர்கள், பேராசிரியர்கள் இவர்களின் கருத்தோவியத்தை அடிப்படையாகக் கொண்ட மருத்துவர் மன்றத்தைப் பொதுமக்கள் யாவரும், வாங்கி அதிலுள்ள உடல்நலப்பாதுகாப்பைப்பற்றிய கருத்துகளை அறிந்து, அதன்படி நடப்பார்கள் என எதிர் பார்க்கிறோம். சைதை நாதசுரவித்வான் திரு. நடராஜன் அவர்களின் கோஷ்டியாரால் நாதசுர இன்னிசை உள்ளத்தை கவர்ந்தது. அவரின் எதிர்காலம் சிறப்பளிக்கும் என்பதோடு அவரின் இனிய நாதம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இசைக் களஞ்சியம் என்பதற்கையமில்லை என்று கூறி முடித்தார். அதன்பின் மருத்துவர்மன்ற ஆசிரியர் நன்றிகூற, கூட்டம் முடிந்தது.

இம் மருத்துவர் மன்ற ஆதரவாளர்களும் நிர்வாகிகளும்

1. தலைவர்: M. A. இரமகிருஷ்ணன், சென்னை.
2. துணைத்தலைவர்: M. சமால்தீன், மண்ணடி.
3. செயலாளர்: P. பலராமன். „
4. துணைச்செயலாளர்: N. பக்கிரிசாமி „
5. பொருட்காப்பாளர்: T. M. லோகய்யா „

குழுஉறுப்பினர்கள்:

6. M. M .S. அகமது „
7. நாதசுர வித்வான் T. கோவிந்தசாமி. பெத்துநாய்க்கன்பேட்டை.

8. நாதசுர வித்வான். A. இராமச்சந்திரய்யா. மண்ணடி.
9. M. S. மஸ்தான். ,,
10. L. சீனிவாசன். பெத்துநாய்க்கன்பேட்டை.
11. P. M. ஆறுமுகம். ,,
12. R. M. நடேசன். திருவல்லிக்கேணி.
13. S. M. ஏழுமலை. தி. நகர்
14. P. ஜம்புலிங்கம். அமைந்தகரை.
15. A. கதிர்வேலன். செங்குன்றம்.
16. T. சதாசிவம். பெருமாத்தூர்; சிதம்பரம்.
17. P. பெருமாள். மண்டபம். ,,
18. M. முத்து. திண்டிவனம்.
19. மீ. கணபதி. திருநெல்வேலி.

M. A. இராமகிருஷ்ணன்.
ஆசிரியர்
மருத்துவர் மன்றம்.
5/81 பிராட்வே சென்னை

நூறாண்டு வாழ்க்கையின் இரகசியம்

(முகில் வண்ணன்)

வாழ்விற்கு அடிப்படை மனம்

'எண்ணத்தைப் போல வாழ்வாய்' என்பது தமிழகப் பழமொழிகளில் ஒன்று. ("எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணியர் ஆகப் பெறின்"- குறள்) இன்று நாம் காணும் ஒவ்வொரு காட்சியும் எண்ணத்தில் தோன்றிச் செய்கையால் மலர்ந்தது தானே? உலகில் இயற்கையாகத் தோன்றிய மலை, ஆறு, கடல், மணல், காடு யாவும் நாம் தோன்றுவதற்கு ஆதாரமான மூலப்பொருள்களாய் விளங்கி, பல யுகங்களாகத் தனது இயற்கை வளத்தில்

மாறுதல் இல்லாமலே விளங்குகிறது என்றுதான் சொல்ல வேண்டும். அவைகளின் சக்தியில் வாழும் நடமாடும் உயிர் இனங்களான மனிதர் முதல் விலங்குவரை எண்ணத்தின் எழுச்சியால் வாழ்பவர்கள் என்பதை மறுக்கமாட்டீர்கள். இன்று மனிதனுல் ஆக்கப்பட்ட நகரங்களும் அதிலுள்ள மாட மாளிகைகளும் எண்ணத்தில் தோன்றித் திட்டமிட்டுச் செய் தவை தானே? எண்ணத்தின் புரட்சிகள்தான் இன்றுவளரும் விஞ்ஞான அதிசயங்கள் என்பதை மறுக்க முடியாதல்லவா? மறுக்கவில்லையென்ருல் வாழ்விற்கு மூலகாரணம் எண்ணம் (மனம்) என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை யாகும். ஆணும் பெண்ணும் ஒரு மனப்பட்டதே இன்பம். மன நிறைவு இல்லாத எந்தப் பணியும் செயலாக முடியாது. உலகில் உயர்ந்த பொருள், இப் பூமண்டலத்தை ஆக்கவும் அழிக்கவும் சக்திவாய்ந்த நமது உடலை உறைவிடமாகக் கொண்ட மனம் ஒன்றுதான். இதுவே நமது வாழ்க்கை என்ற உடலுக்கு ஒப்பற்ற தலைவன். இந்தத் தலைவன் நல்லது கெட்டது இரண்டையும் செய்யும் வல்லமை வாய்ந்த வன் என்பதைத் தெள்ளத்தெளிய அறிவோம். மண் தண் ணீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற ஐந்துவகை மூலப் பொருள்களால் உலகம் வளர்வதுபோல உடலும் ஐந்து வகையால் வளர்கிறது. இவ்வைந்தின் தன்மையை உணர்ந்து சமநிலையிலிருந்து வழுவாது காத்துவரும் தலைவனே மனம். அறிவின் துணையை நாடினுல் நாம் வளர்கிருேம்; அறியா மையை நாடினுல் தேய்ந்து மாய்ந்து மறைகிருேம்.

ஆடுந்திரிகை அரைச் சுற்று வருமுன் ஓடும் நினைவு ஒரு கோடி என்பர். மனம், கண் இமைக்கும் நேரங் கூட ஒருநிலைப்படுவதில்லை. இதை அனுபவத்தில் கண்ட பெரியோர்கள் சிந்தை அடக்கியே சும்மாவிருக்கின்ற திற மரிது என்று கூறிப்போந்தார்கள். நாம் சிந்தையை (மனதை) அடக்கி வாழவேண்டும் என்ருல் நமக்கு வாழ்நாள் முழுதுமே காணுது. 'மனத்தை நல்லவழியில் செலுத்துவதே உடலை வளர்க்க அடிப்படை' என்பதை மட்டும் புரிந்து செய் தால் போதும்.

எண்ணமும் வாழ்க்கையின் தொடர்பும்

எண்ணங்களுக்கிரையான வாழ்வைக் கவனிப்போம். பாடலிபுரத்திற்கு வாருங்கள். சந்திரகுப்த மவுரியனின் அழ கான கோட்டையைப் பாருங்கள். ஆயிரக் கணக்கான அறை

களையும். அழகிய சிற்பங்கள், தந்தம், பொன், வைரவைடூரியங்களால் அலங்கரிக்கப்பட்ட படுக்கை அறைகள், அந்தப் புரங்கள், சபாமண்டபங்கள், உல்லாச வனங்கள், ஆயுதச் சாலைகள், காலாட் படைகள், குதிரைப் படைகள், யானைப்படைகள், அரசுக்கு வேண்டிய அத்தனையும் அரசன் எண்ணியபடி அமைத்துள்ளான். ஆனல் அரசனின் எண்ணம்(லட்சியம்) என்ன? பரந்த சாம்ராஜ்யமாகச் செய்தலே. போர் என்ற எண்ணம் சிறப்பாக இருந்தது. கடைசிக் காலம், எண்ணத்தின் எதிர்மறை வலுத்தது. வடக்கிருந்து மறைந்தான் அசோகன். பரம்பரை எண்ணத்திலே ஊறியவன். பரந்த சாம்ராஜ்யம் செயல் யாவும் போர்முரசு கொட்டுவதே. சாம்ராஜ்யம் விரிவுபடுகிறது. கலிங்கத்துப் போர் மூள்கிறது. பிணமலை குவிகிறது. ரத்த ஆறு ஓடுகிறது. மக்கள் ஓலம், கழுகுகள் வேட்டை, பிணவாடை வீசுகிறது. போர் முரசு அடங்குகிறது. அசோகனின் கண்கள் நாலாபக்கமும் சுழல்கின்றன. கண்ட காட்சி மன்னன் மனத்தை மாற்றுகிறது. மெய் சோர்ந்து உள்ளம் உருகுகிறது. வாழப் பிறந்தவர்கள் போய் விட்டார்கள்! அவர்களை அண்டி வாழ்ந்த மனைவி மக்கள் புழுவாய்த் துடிக்கிறார்கள். மக்கள் வாழ்ந்தால்தானே மன்னன் வாழலாம். மாவீரம் எதற்கு? மக்களைக் கொல்வதற்கா? இல்லை.மக்களைக் காப்பதற்கு.எத்தனையோ ஆண்டுகள் வாழ்ந்து எண்ணிச் செயல் புரிந்தகோட்டையெல்லாம் நொடியில் தூளாயின. உடைவாள் நழுவிற்று. உள்ளம்நெகிழ்ந்து கண்களில் நீர் கரை புரண்டோடிற்று. எங்கும் சோகநிலை. வாழவேண்டுமா? வேண்டாமா? என்ற இருள் உள்ளத்தை மூடியது. ஒளி எங்கே? என்ற கேள்வி பிறந்தது. 'டணர்', டணர்' என்ற மணியோசை, வெகுதூரத்தில் இருந்து இனிய கீதம் ஓசை வடிவிலே, செவிக்கினிதாக மட்டுமல்லாமல் புழுங்கிய உள்ளத்திற்குப் பொன் மருந்தாக, குளிர்ந்த நீராகப்பாய்கிறது. விழித்துக் கொண்டது மன்னனின் அறிவு. வீறுகொண்டு எழுகிறான். உள்ளத்தைப்பிழிகிறான்.தாரைவார்க்கிறான் பூமியிலே. இதோ சாம்ராட் அசோகன் அழிந்தான். புத்தனைப்போற்றிப் பொருளைஉணர்ந்து பொறுமையுடன் மக்கள் சேவை செய்யும் புனித அசோகனாக மாறுகிறான். புத்தரின் அருள்நெறி அசோகனின் சொந்த லட்சியமாக மாறுகிறது. கேட்பானேன்? அசோகனே மக்கள். மக்களே அசோகன். சிந்தியுங்கள். எதையும் ஆற்றல் வாய்ந்த மனம், அறியாமை அறிவு இரண்டு துருவங்களையும் பார்த்தோம். மனத்தின் ஆற்றலையும் கணித்தோம். எது வேண்டும்? என்பது புலனு

கிறது. புத்தம் சரணம் கச்சாமி-புத்தர் கொள்கைளை நினைவூட்டும் புனிதச் சொல். உலகமறியாத சித்தார்த்தன், சகல இன்ப லோகங்களும் அரண்மனையிலே துன்பத்தின் பெயரைக்கூடக் கேட்டறியா உள்ளம்; தன்னைப்போன்ற மற்றவர்களும் இன்ப வாழ்க்கை வாழ்வதாக எண்ணிக்கொண்டிருந்த சித்தார்த்தர், பிணி மூப்பு, சாக்காடு இல்லாத உலகம் என்ற போதையில் ஆழ்ந்திருந்தார். நகர் புறக்காட்சி காணத் துடித்தது சித்தார்தருக்கு. முதலில் கண்டான். கூன்விழுந்து, நரைதோன்றி, முதுமையடைந்த வயோதிகரை அடுத்துச் சுடுகாடு நோக்கிக் கொட்டு மேளத்துடன் சென்ற பிணம், புதிய உலகத்திலே சுற்றுலாவந்த சித்தார்த்தனுக்கு அதுதான் முதலில் கண்ட காட்சி. மீண்டும் செல்ல விரும்பவில்லை.

அரண்மனைக்குத் திரும்பிவந்த சித்தார்த்தர் உள்ளம் சோர்ந்தார். உண்மை உணர்ந்தார். உலகமும் அதிலுள்ள ஜீவராசிகளும் ஒருநாள் அழியக் கூடியவைகளே என்ற அறிவு விழித்தெழுந்தது. இராஜோபசாரம், ஆடை அலங்காரம், மனைவி, மக்கள் அரசபோகம் யாவும் ஒருகாலத்தில் அழியக்கூடியதே என்ற ஆராய்ச்சி பெருகிற்று. தன்னலம் கைவிடப்பட்டது. இன்பங்களை இகழ்ந்தார். மனைவி மக்களைத் துறக்கமுடியாமல் வேதனைப்பட்டார். ஒருநாள் இரவு, படுக்கையறையிலே பத்தரை மாற்றுத் தங்கம் போன்ற மனைவி, சிலை போன்ற மகவு. ஆழ்ந்த நித்திரை. வானத்திலே வெண்ணிலவு; படுக்கை அறையிலே ஒரு பொன்னிலவு. வெண்ணிலவும் பேசவில்லை. பொன்னிலவும் பேசவில்லை. நகரமே நல்ல நித்திரையிலிருக்கும் நேரம். இன்பக் கனியமுது, தனது பேரின்பச் செல்வம் குட்டிச் சந்திரனைக் காட்சியளிக்கிறது. செய்வதறியாது திகைத்தான் சித்தார்த்தன். எண்ணங்கள் சுழன்றன. எண்ணச் சுழலிலே ஒரு துன்பக்கனவு. மானிடர்கள் மூப்படைகிறார்கள். பெண்ணிலே தோன்றி, மண்ணிலே மறைகின்றார்கள். தான் கண்ட பிணக்கோலம்! ஒரே வெறுப்பு. காணும் பொருள்கள் யாவும் அழியப்படும் பொருளே. இன்பமென்ற மாயையை மறுப்பதுதான் உண்மை வாழ்க்கை. எண்ணம் (மனம்) திருந்தினல் மாயை திருந்தும். வைராக்கியமில்லாத உள்ளம், எண்ணத்திற்குத்தான் அடிமையாக வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஒளி பிறந்த முகத்துடன் தங்கச் சிலையான மனைவியையும் மரகதப் பதுமைபோன்ற மகனையும் ஒருமுறை கண்கள் மீண்டும் சந்தித்தன. மீண்டும்திரும்பிப்பாராது அரண்மனையான இன்பபுரியை விட்டுப்போய்க் கொண்டிருந்தது பொருள் நிறைந்த கருணை

166177

உருவம். எண்ணங்கள் முழு உருவம் பெற்றன. போதிமரமும் இடம் தந்தது. புத்தனின் அறவொழுக்கமும் நாட்டுக்கு நாடு வளர்ந்தது. எண்ணத்தில் வளர்ந்த செயல்கள் வாழ்க்கைப் பாதையைத் தன்னலமற்ற முறையில் தான் கண்ட இன்பத்தை உலகமும் பகிர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பை அளித்த மகாபுருஷர்கள் இப்படி எத்தனை பேர்! அவர்கள் கருத்து, நமது எண்ணத்தை நல்வழியில் திரும்பினுல் எல்லா நன்மைகளையும் அடையமுடியும் என்ற உணர்வு நமக்குத் தோன்றுகிறதல்லவா?

மன உணர்ச்சிக்கு இடம் தரலாமா ?

அப்படியானுல் உலகை அழிக்கவும், உண்டுபண்ணவும் மனத்திற்கு ஆற்றலுண்டா? அதே உள்ளம் குடியிருக்கும் கூட்டை ஒரு நூற்றுண்டு வளர்க்க முடியாதா? எப்படி வளர்க்க முடியும்? அந்த அரும்பெரும் பாதையை அறிந்து மனத்தையும் அவ்வழிச் செலுத்தினுல் நூறுண்டென்ன? அதற்கு மேலும் வாழ முடியும் என்பதற்குச் சந்தேகமில்லை.

நாட்டில் பல பத்திரிகைகள் தோன்றிப் பல கருத்துகளை மக்கள் புரிந்துள்ளார்கள். அன்றுட வாழ்க்கையிலே அரசியல் கட்சிகள் அலசி அலசிப் பேசப்படுகின்றன. அந்த அளவிலே உடல் வளர்ப்பு ஏன்? எப்படி நடைபெற வேண்டும்? என்ற விவரங்கள் அரசியலைவிட அதிகமாக நாம் புரிந்து கொண்டு மனிதன் நமது நாட்டில் நூறுண்டு வாழ வேண்டும் என்ற நோக்கமே இப்பத்திரிகையின் நோக்கங்களில் ஒன்று. ஆதலால் இப்பகுதி தொடர்ந்து வெளிவரும். மக்கள் இதையறிந்து அதன்படி நடப்பாராகில் உடல் நலத்துடன் நூறுண்டு உயிர் வாழ்தல் முடியும் என்பதே எங்கள் நம்பிக்கை.

ஆனுல் அதற்கு அடிப்படையான மனம் என்ற உட்பொருளை அறிந்து, அதன்படி நடப்பது நீண்ட வாழ்க்கைக்கு ஆரம்பச்செயல். ஆதலால் மனத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள வேறு பிரிவுகளை நாம் நன்ருக அறிந்துகொண்ட பின்புதான் நமக்கு தன்னம்பிக்கை உண்டாகும். எனவே மனத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள உறவை நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு அறிஞர் சொல்கிருர், 'ஒரு வெடி குண்டைவிட எண்ணம் கொடியது' என்று. அதாவது

ஒருவன் தன் வாழ்நாளில் தன் நிலையைப்பற்றிக் குறைவான, ஆபத்தான வகையில், நாளை நமக்கு என்ன நேருமோ, ஊரில் அடிக்கும் நோய் நம்மைப்பற்றுமோ? என்ற திகிலுடன் கூடிய நினைப்பு, செயலாகமாறி, உயிரைக் குடித்துவிடும். வெடிகுண்டை வெடிக்காமல் செய்துவிடலாம். உள்ளத்தின் நினைவை அழிக்க முடியவில்லை. 'எண்ணம்' என்ற நெருப்பு 'யாக்கை' என்ற சருகைப் பழமுதிர் சோலையாக வளர்த்து விடலாம்; எறித்தும் விடலாம். 'தீய எண்ணங்களுக்கு இடந் தரலாகாது' என்பதுதான் அடிப்படை.

(தொடரும்)

நாட்டுக்கு நல்லவைகள்

சித்தவைத்தியக் கல்லூரி உடனே நிறுவவேண்டும்

மதுரை, ஜூலை31. இந்தஆண்டில் சித்தவைத்தியக் கல்லூரி தொடங்க அரசாங்கம் அனுமதி அளித்துவிட்டதென்றும் அதன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென மதுரைச் சித்தவைத்திய மகாநாட்டில் தலைமை வகித்த முன்னாள் சென்னை மேல்சபை உறுப்பினர் திரு. டி. புருஷோத்தமன் முதலியார் குறிப்பிட்டார். தமிழ்நாடு நாட்டுமருத்துவர் மத்தியசங்கத்தின் கூட்டம் மதுரை மாவட்டக் கிளைச் சங்க ஆதரவில் இராதாகிருஷ்ண திருமணமகாலில் கூடியது. மாநில சித்தவைத்தியப் பிரமுகர்கள் எல்லாப் பகுதியிலிருந்தும் கலந்துகொண்டனர். மாநாட்டைத் துவக்கி வைத்து மருத்துவக் கல்லூரி சித்தமருத்துவத் தலைமைப் பேராசிரியர் கூறியதாவது ஆங்கில மருத்துவத்திற்கு ஒரு ஆலோசனைக்குழு, இந்திய மருத்துவ முறைக்கு ஒரு ஆலோசனைகுழு அவசியம் என்றார். "எல்லாவைத்தியர்களும் நாட்டு மருத்துவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து அந்தஸ்து கௌரவம் அடையவேண்டும்" என்றார். "மாநிலமாநாடு டிசம்பர் மாதத்தில் கூடும்" என்று குறிப்பிட்டார். பின்னர் டாக்டர் பி. இராஜகோபால், டாக்டர் S. S. வேலன், சபாரத்தினம், முத்துஅடிகள், செல்லையா தேவர், டாக்டர் S. S. ஆனந்தம், டாக்டர் ஆனந்தகுமார் முதலியோர் பேசினர்.

மக்கள் மன்றம் தீட்டிய திட்டங்கள்

தமிழ்நாட்டுக்கு 120 கூட்டுறவுப்பண்ணைகள் 3வது 5வது ஆண்டுத் திட்டத்தில் ஏற்படுமென மக்கள் மன்றத்தில் அமைச்சர் R. வெங்கட்ராமன் தகவல். அரிசனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் 100 குடியமைப்பு விவசாயப்பண்ணைகள் 30 பண்ணைகள் கொண்ட 3 முன்னோடித் திட்டங்கள் 1961-62 லேயே துவக்கப்படும். இம்முன்னோடித் திட்டங்கள் தவிர, எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் கூட்டுறவுப் பண்ணைகள் துவக்கப்படும். சர்க்கார் நிலங்களுக்கும் சிறுநிலங்களின் சேர்க்கைகளுக்கும் பண்ணைகள் துவக்கப்படும்.

அரிசனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்குமான 100 நிலக்குடியேற்ற கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்கவும் உத்தேசித்துள்ளது. சர்க்கார் செலவழிக்கும் தொகையில் ஐம்பது சதவீதம் மத்தியசர்க்கார் ஏற்றுக் கொள்வார்கள். கடனுக்காக ஏற்கப்படும் செலவை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரிசனங்களுக்காக 87 கூட்டுறவுப் பண்ணைகள் தமிழ்நாட்டு சர்க்காரிடம் உள்ளன என அமைச்சர்கூறினர்.

தமிழ்நாட்டின் மாடு வளர்ப்பு ஆராய்ச்சித் திட்டம்

"3வது திட்டத்தில் 10லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது'' என அமைச்சர் பக்தவச்சலம் கூறினர்.

இரயில் விபத்திற்கு ஆளாகும் நபர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்குப் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் இராமசாமி கூறினர்.

நேர்மையாளர்க்குப் பதவி

சென்னை செப் 7உ

அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. S. N. சொக்கலிங்கம் அவர்களைப் பாடப் புத்தகங்களுக்கு விசேஷ அதிகாரியாக அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டது பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

மூன்று உண்மைகள்

1. பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் 1950-51ல் சென்ற மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை. 2கோடி, 40லட்சம் இப்போது 4கோடி, 60லட்சம்.

2. இந்தியாவில் சராசரி வயது 32ஆக இருந்தது 47 ஆக ஆகியுள்ளது.

3. சமுதாய அபிவிருத்தி, 'பஞ்சாயத்து ராஜ்யமா'க உயர்ந்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து 75 ரூபாய்க்குமேல் சாமான்கள் வந்தால் தீர்வை

ஆனால் "2000/இரண்டாயிரம் ரூபாய் ஆபரணத்திற்குத் தீர்வை இல்லை" என்கிறார் தேசாய்

புதுடில்லி மக்கள்மன்றத்தில்

ஒருகேள்விக்குப் பதிலளிக்கையில் நிதிஅமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய், பிரயாணிகள் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரும் சாமான்கள் சம்பந்தமான விதி 1961 ஜனவரி 1ம் தேதி முதல் அமுலில் இருந்து வருவதாகக் கூறினார்.

பழைய விதிகளின்படி, ஒவ்வொரு பிரயாணியும் ஒரு காமிரா கையில் எடுத்துச்செல்லக் கூடிய டைப்ரைட்டர் இயந்திரம், இரண்டு கைக்கெடிகாரம் போன்ற சில விலை உயர்ந்த சாமான்களையும், 500 ரூபாய் விலைக்கு உட்பட்ட பலவகைச் சாமான்களையும் கொண்டுவரலாம் என்றிருந்ததைப் புதிய விதிகளின்படி, 500 ரூபாய் முதல் 1000 ரூபாய் விலை பெருமான பொருள்களை அவர்கள் வெளிநாடுகளில் எவ்வளவு நாள் தங்கி இருந்தனர் என்பதைப் பொறுத்துக் கொண்டு வரலாம் என்றும், காமிரா, டைப்ரைட்டர் போன்ற வற்றிற்குத் தனியாக விதிவிலக்கு எதுவும் கிடையாது எனவும் கூறினார். மேலும் 75ரூபாய்க்கு மேற்பட்ட பொருள்களைத் தீர்வை செலுத்தாமல் கொண்டுவர முடியாது இப்போது 2000 இண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஆபரணங்களைத்தான் தீர்வையின்றிக் கொண்டுவர முடியும் எனக் கூறினார்.

நன்றி

தமிழ்நாட்டில் முடிதிருத்தும் தொழிலாளர்கள் கட்டுப் பாடாக அடியிற்கண்ட மாவட்டங்களில் மனித சமூகத்திற்கு அத்தியாவசமான ஓய்வு நேரத்தை உணர்ந்து வாரவிடுமுறை அளிப்பவர்களுக்கு எங்கள் நன்றி.

சென்னை, மாம்பலம், நுங்கம்பாக்கம், தேனும்பேட்டை, சைதாப்பேட்டை, தாம்பரம், பல்லாவரம் இவைகளைச் சார்ந்த எல்லா டிவிஷன்களும், நகரத்தில் மற்றும் பெரும்பகுதி களில் ஒரு சிலர்தவிரப் பெரும்பாலோர் முயற்சியில் சென்னை முழுதும் இவ்வியக்கம் அமுலுக்கு வருமென நம்பப்படுகிறது.

தஞ்சை, மாயவரம் நகரில் தொழில் நிலையங்கள் வெளி வேலைசெய்பவர்கள்யாவரும் கட்டுப்பாடாகவாரந்தரவிடுமுறை அளிப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேம். இடையில் சுயநலத்திற் காக எங்கோ ஒரு அன்பர் முரண்பிடிப்பதாகத் தெரிகிறது. அதையடுத்து, கடைமுன் மறியல்செய்து அறப்போர் நடக்கப் போவதாக அறிகிறோம். எல்லா மாவட்டங்களும் இதில் அக்கறை செலுத்தி, வாரவிடுமுறையை அமுலாக்க வேண்டு கிறோம்.

தங்கள்,

M. A. இராமகிருஷ்ணன்

பொதுச் செயலாளர், த. ம. ம. சங்கம்.

சாதாரண மக்களுக்கு 'மது பர்மிட்' தரப்படுமா ?

அளவோடு கள், சாராயம் குடித்தால் உடலுக்கு நல்லது, என நிபுணர்கள் கருதுவதால், அளவோடு குடிக்கச் சர்க்கார் பர்மிட் வழங்க உத்தேசமுண்டா? என்ற கேள்விக்கு அர சியல் நிர்ணய சட்டம், மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக் கிறதென்றும் 'அளவோடு குடிக்க பர்மிட் வழ்ங்க சர்க்கா ருக்கு உத்தேம் கிடையாது' என அமைச்சர் பதில் கூறிய தோடு, "கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் துப்பு கண்டு பிடித்துக் கொடுக்கும் கிராமங்களுக்கு, ரேடியோ, வாசகசாலை அமைத்து கொடுப்பது போன்ற பரிசுகள் வழங்கப்படுகிறது" என அமைச்சர் பக்தவத்சலம் கூறினர்.

உச்ச வரம்புமசோதா மக்கள் அபிப்பிராயத்தை, ஏற்று பரிசீலித்த கூட்டு செலக்ட் கமிட்டியின் அறிக்கைகள்.

தர்ம ஸ்தாபனங்கள்

தர்மஸ்தாபனங்களின் நிலங்களின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த சர்க்கார் தனி மசோதா கொண்டு வரலாமெனக் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

குடும்ப அங்கத்தினர்களுக்குத் தனிச்சொத்து.

குடும்பத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் 10 ஏக்கர் வரை சில நிபந்தனைகளுக்குட்பட்டு வைத்துகொள்ள அனுமதிக்க வேண்டும். 5 அங்கத்தினர்களுக்கு மேற்படாத குடும்பம் ஒன்று 30 ஏக்கர் வரை நிலம் வைத்துகொள்ளலாம் எனக் கண்டுள்ளது. பட்டுபூச்சி, தோட்டப் பயிர், மேச்சல் தரை, உரப் பயிர் விளைவிப்பதற்கும், கோழி, கால் நடை, பால்பண்ணை, மரம் வளர்ப்பு இவைகளுக்கு ஒதுக்கியுள்ள நிலங்களையும் சேர்த்துக்கொள்ளக் கமிஷன் சிபார்சு செய்துள்ளது.

குடும்பம் பற்றிய விவரம்

இந்து, இந்து அல்லாதார் என்ற வித்தியாசத்தை நீக்கிக் குடும்பத்தில் கணவன், மனைவி, மைனர் குமாரர்கள், மணமாகாத பெண்கள், மகன் வழியில் தந்தையை இழந்த மைனர் பேரன்கள், மணம் ஆகாத பேத்திகள் ஆகியோர் மட்டும் சேர்ந்ததாக இருக்கவேண்டும். தஸ்தாவேஜுகள் மூலம் பாகம் பிரித்துக்கொண்ட குமாரர்களோ, பேரன்களோ இதில் சேரமாட்டார்கள் எனக் கமிட்டி சிபார்சு செய்கிறது.

பிற்பட்டோர் நிலையை ஆராயும்குழு

முதல் இரண்டாவது திட்டக்காலத்தில் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் பற்றி ஆராய விசேஷக் குழுவினர் நியமனம் செய்யபட்டோர் பட்டியல் வருமாறு.

திரு. எம். பி. பார்கவா, சேர்மன் திரு. ஆச்சாரியபிஸே, திரு. டபிள்யூ. வி. ஒக், திருமதி. பி. பி. நாயுடு, திரு. கே. எஸ் சந்திரசேகரன், ஜி. நரசிம்மலு, பிர்பாகர்ஜி, டி. வி. ரங்கராஜன்.

இந்தியாவின் ஜனத்தொகை

1961 மார்ச்1ல் 43கோடி, 60லட்சம். 1951ல் இருந்த ஜனத்தொகையைவிட இது 7கோடியே 70லட்சம் அதிகமாகும்.

வேதகிரி நியூ பர்னீச்சர் மார்ட்

அன்றொருநாள் பாரதி?

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் செய்வோம் பல வன்மைகள் செய்வோம்.

என்றார்.

அன்னியரை எதிர்பார்த்த சலூன் நாற்காலிகள் இன்று தமிழ் நாட்டில் செய்யும் அளவு பாரதி கனவு பலித்தது. தமிழன் பெருமிதத்தோடு தலைதூக்கி நடக்கும் நன்னாளுக்கு முதல் படிதான்.

வேதகிரி நியூ பர்னீச்சர் மார்ட்

கலையில் சிறந்த சலூன் தொழில் அதிபர்கள் நிலையங்கள் அழகிய கலைக் கூடமாக வேண்டுமானால் இங்கே வாருங்கள். சலூன் நாற்காலிகள், மேஜை, சோபா செட்டுகள் சோழன் காலத்துச் சிற்பக் கலை அமைந்த வாசற்படி அலங்காரங்கள் யாவும் உங்கள் விருப்பப்படி யமைத்துத் தருகிறோம்.

வேதகிரி பர்னீச்சர் மார்ட்
மான் மார்க்கு சலூன் நாற்காலி உற்பத்தியாளர்,
136, வெங்கடாசல முதலி தெரு,
மீர்சாகிப் பேட்டை, சென்னை-14.

குமார் ஸ்டோர்ஸ்

எப்பொழுதும் ஒரே கூட்டம்! ஏன்?

மலர் மலர்ந்ததும் நறுமணம் வீசுகிறது. வண்ண மலர்களை வகை வகையான மாலை தொடுத்து மாதரின் தலையை அலங்கரிப்பது மாலை புனைந்த கலைஞனின் கைத்திறமையல்லவா?



நறும் பஞ்சி மலர்ந்து ணத் துகிலாகி ரச், சுற்றி ழகு மணம் து. வகை ாக வண்ண பில் மலர் வும் உருவு றத் திற்கும் ந்த ரகச் யப் பொறுக் டுப் பது பொ ான வியாபா ன் திறமைய ா?

உங்கள் அன்பில் மலர்ந்த

அமிர்தகுமார்

உரிமையாளரே நேரில் சென்று உறுதியும் நீடித்த உ ம் மிகுந்த நல்ல ரகத் துணிகளைத் தனது பார்வையில் செ டு வருகிறார். அதுதான் கூட்டத்தின் ரகசியம்.

மக்கள் விரும்பும்

பின்னியின் உயர்ந்தரகத் துணிகள், மேட்டூர் மல், ப ப சில்க், உல்லன் திறுசுகள், பனியன்கள், ரெடிமேட் ஆ ர், மணமகள் விரும்பும் வழவழப்பான காஞ்சீபுரம் வண்ணமலர் ச் சேலைகள், சோளிகள், பாவாடைகள் கண்கவரும் மைசூர் க் பட்டுச் சேலைகள் தமிழ் நாட்டில் பிரசித்திபெற்ற கை ச் சேலைகள் விதவிதமாக அடுக்கப்பெற்ற அழகிய கலைக் ம குமார் ஸ்டோர்ஸ்.

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஸ்தாபனம்

குமார் ஸ்டோர்ஸ்

358, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

(தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளிக்கருகில்)

சென்னை, திருப்பள்ளி வீதி, ரத்தினம் (கிளை) அச்சகத்தில் V. திருநாவுக்கரசால் அச்சிடப்பட்டது. ஆசிரியரும், வெளியிடுபவரும் M. A. இராமகிருஷ்ணன், 5/81 பிராட்வே, சென்னை.